விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 221வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 11 சனிக்கிழமை (27.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# ஜனாதிபதித் தேர்தல் செப்ரெம்பர் 21

## வெளியானது விசேட வர்த்தமானி

(கொழும்பு)

நாட்டின் 9ஆவது ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பான அதிவிசேட வர்த்தமானி நேற்றுக் காலை வெளியிடப்பட்டது.

(15ஆம் பக்கம் பார்க்க)

### நள்ளிரவு முதல்

## பாணின் விலை குறைப்பு

(கொழும்பு)

பாணின் விலை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில்

15

### அடுத்த வருடம் முதல்

## இலத்திரனியல் கடவுச்சீட்டு

(கொழும்பு)

அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் இலத்திரனியல் கடவுச்சீட்டுகள் வழங்கப்படும் என குடிவரவுமற்றும்குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

www.immigration.gov.lk என்ற இணையத்தளத்தினூடாக

15

### உரும்பிராயில் இளைஞன் ஒருவர்

## கும்பல் ஒன்றால் கடத்தப்பட்டு வாளால் வெட்டி சித்திரவதை

### கிளிநொச்சியிலிருந்து காதலியை பார்க்க வந்த வேளை விபரீதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உரும்பிராய்ப் பகுதியில் இளைஞன் ஒருவரைக் கடத்திச் சென்ற கும்பல் வாளால் வெட்டி சித்திரவதை செய்த சம்பவமொன்று நேற்று மாலை இடம்பெற்றுள்

15

## யாழில் வர்த்தகர்களை இலக்கு வைத்து பண மோசடி

### அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழில் வர்த்தகர்களைக் குறிவைத்து இலங்கை தொலைத்தொடர்பு திணைக்களம் மற்றும் அரச வங்கிகளின் பெயர்களைப் பயன்படுத்தி பண மோசடிகள் இடம்பெறுவதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

சுன்னாகம், யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிலைய உரிமை

02

### ஜனாதிபதித் தேர்தலில்

## சுயேட்சை வேட்பாளராக போட்டியிடுவதற்காக

### கட்டுப்பணம் செலுத்தினார் ரணில்

(கொழும்பு)

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவதற்கான கட்டுப்பணம் செலுக்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் 2024 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடத்

15

## தேர்தல் சட்டத்துக்கு எதிராக எவரும் செயற்பட முடியாது

### தேர்தல்கள் ஆணைக்குழு



(கொழும்பு)

தேர்தல் சட்டத்துக்கு எதிரான செயற்பாடுகளில் எவரும் ஈடுபட முடியாது. தேர்தல் தொடர்பான செயற்றிட்டங்கள் மற்றும் சட்ட வழிமுறைகள் தொடர்பான அறிவுறுத்தல்களை வெகுவிரைவில் வெளியிடுவோம் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.எல்.ரத்நாயக்க

02

### தேர்தல் நடவடிக்கைகளில்

## 12 ஆயிரம் தபால் திணைக்கள பணியாளர்கள் கடமையில்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளுக்காக 12 ஆயிரம் தபால் திணைக்களப் பணியாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அஞ்சல் திணைக்களத்தின் பிரதி அஞ்சல்மா அதிபர் ரஞ்சித் கே.ரணசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அதன்படி, இன்று முதல் நடைமுறையாகும் வகையில் அவர்கள் தேர்தல் கடமைகளை ஆரம்

15

## ஜனாதிபதி வேட்பாளர்கள் 12 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே இம்முறை

15

### இலங்கைத் தமிழரசுக் கட்சி

## பொது வேட்பாளரை நிறுத்தப் போவதில்லை

### எம்.ஏ.சுமந்திரன்



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில், ஒரு சமூகத்தை மாத்திரம் மையப்படுத்தி வேட்பாளர் நிறுத்தப்படக் கூடாது என்ற அடிப்படையில், தமிழ்ப் பொது வேட்பாளர்

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருதனார்மடத்தில் இளைஞன் மீது வன்முறைக் கும்பல் தாக்குதல்

### நால்வர் கைதாகி மறியல்

மருதனார்மடத்தில் வெற்றிலை வியாபாரம் செய்கின்ற 29 வயது இளைஞன் ஒருவர் மீது வன்முறைக்கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது. நேற்று முன்தினம் இச் சம்பவம் இடம்பெற்றது.

தாக்குதலுக்கு உள்ளானவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த இளைஞன் வியாபாரத்தினை முடித்து விட்டு வீட்டுக்கு செல்கின்ற வேளையிலேயே இந்த தாக்குதல் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலை மேற்கொண்ட குற்றச்சாட்டில் நால்வரை சுன்னாகம் பொலிஸார் கைது செய்து நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்திய வேளை அவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

முன்பகை காரணமாக இந்த தாக்குதல் சம்பவமானது இடம் பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-7)

## யாழ். நகரில் தவறி விழுந்த தொலைபேசியை திருடியவரும் வாங்கியவரும் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரத்தில் தவறி விழுந்த தொலைபேசியை திருடியவரும், அதனை வாங்கியவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ் நகர்- கன்னாதிட்டி பகுதியில் கடந்த 14ஆம் திகதி இந்த திருட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

பெண் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிய போது, அவரது தொலைபேசி கன்னாதிட்டியில் தவறி விழுந்துள்ளது. அந்தப் பெண் அதை கவனிக்கவில்லை.

அந்த பகுதியில் நின்ற ஒருவர் அதனை அவதானித்து, தொலைபேசியை எடுத்துக் கொண்டு தலைமறைவாகி விட்டார்.

சிறிது தூரம் சென்று பார்த்த பொழுது தொலைபேசியை காணவில்லை மறுபடியும் அந்த இடத்திற்கு வந்து தேடிய பொழுது தொலைபேசி கிடைக்கவில்லை. பின்னர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டாரவுக்கு கீழ் இயங்கும் யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினர், சிசிரிவி கமராவின் உதவியுடன் சந்தேகநபரை அடையாளம் கண்டனர்.

நேற்று குறித்த நபர் நடமாடுவதாக மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு தகவல் கிடைக்க பெற்றதையடுத்து, அந்த பகுதியில் நடவடிக்கை மேற்கொண்டு சந்தேகநபரை கைது செய்தனர்.

கைதானவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், தொலைபேசியை திருடியதையும், பின்னர் விற்பனை செய்ததையும் தெரிவித்தார்.

இதையடுத்து, தொலைபேசியை வாங்கியவரை அடையாளம் கண்டு, அவரையும் கைது செய்து, தொலைபேசியை மீட்டனர்.

கைதான ஒருவர் சாவகச்சேரி பகுதியை சேர்ந்தவர் என்றும் மற்றவர் முழங்காவில் பகுதியை சேர்ந்தவர் என்றும் விசாரணையில் தெரியவந்தது. (ம-7)

## தேர்தல்...

தெரிவித்தார். தேர்தல்கள் ஆணைக்குழுவின் காரியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (26) இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பை ஏன் விரைவாக வெளியிடவில்லை என்று பலர் கடந்த காலங்களில் கேள்வியெழுப்பினார்கள். தற்போது அறிவிப்பை வெளியிட்டுள்ளோம்.

அனைவருக்கும் சாதகமான வகையில் சனிக்கிழமையன்று வாக்கெடுப்பை நடத்த தீர்மானித்துள்ளோம். சனிக்கிழமை வாக்கெடுப்பு நடத்தப்பட்டு, ஞாயிற்றுக்கிழமை வாக்கெண்ணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். முன்வைக்கப்பட்ட சகல குற்றச்சாட்டுக்களுக்கும் வர்த்தமானி ஊடாக பதிலளித்துள்ளோம்.

அரசியலமைப்பின் ஏற்பாடுகள் மற்றும் 1981 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல்கள் சட்டம் என்பனவற்றுக்கு அமைவாகவே நாங்கள் செயற்படுகிறோம்.

இதனை தவிர்த்து பிற தரப்பினரது அழுத்தங்களுக்கு தலைகுனிய போவதில்லை. தேர்தல் சட்டத்தின் ஏற்பாடுகள் வெள்ளிக்கிழமை (26) செயற்படுத்தப்படும். தேர்தல் சட்டத்துக்கு எதிரான செயற்பாடுகளில் எவரும் ஈடுபட முடியாது. தேர்தல் தொடர்பான செயற்திட்டங்கள் மற்றும் சட்ட வழிமுறைகள் தொடர்பான அறிவுறுத்தல்களை வெகுவிரைவில் வெளியிடுவோம்.

ஜனாதிபதித் தேர்தல் பணிகளை அரச அச்சகத் திணைக்களமும், தபால் திணைக்களமும் வெள்ளிக்கிழமை (26) முதல் ஆரம்பித்துள்ளது.

தேர்தல் பணிகளுக்கு பொறுப்பாக உள்ள சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் ஆணைக்குழுவுடன் ஒன்றிணைந்து செயற்படுகிறார். தேர்தல் நடவடிக்கைகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றார். (ம-7)

## யாழில்...

யாளர்களின் தொலைபேசிக்கு இலங்கை தொலைத் தொடர்பு நிறுவகத்தில் (ரெலிக்கொம்) இருந்து கதைப்பதாகவும் நீங்கள் உங்களது தொலைபேசி கட்டணங்களை சிறந்தமுறையில் செலுத்துவதன் காரணத்தால் உங்களுக்கு பரிசு வழங்கவுள்ளதாகவும் அதற்கு உங்கள் அடையாள அட்டை இல, வங்கிக் கணக்கு இலக்கம் என்பனவற்றினை தருமாறும் கோரியுள்ளனர்.

இத்தரவுகள் வர்த்தகர்களினால் வழங்கப்பட்ட சிறிது நேரத்தில் ஓர் OTP இலக்கம் வங்கியின் பெயரிலேயே அனுப்பப்படுவதாகும் சிலருக்கு வங்கிக்கு பணம் அனுப்பியதுபோன்று வங்கியின் பிரத்தியேக செயலிக்கே தரவுகள் அனுப்பப்படுவதாகவும் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்பின் மீள் அழைப்பெடுக்கும் மர்மநபர்கள் அவ் குறித்த இலக்கங்களினை கோருவதாகவும் சுட்டிக்காட்டிய வர்த்தகர்கள் தாம் சந்தேகமடைந்து விசாரித்தால் அவ் அநாமதேய இலக்கத்தை மீளத் தொடர்பு கொள்ள முடியவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

எனவே இவ்வாறான தொலைபேசி அழைப்புகள் தொடர்பில் அவதானமாகச் செயற்படுமாறும் முறைகேடுகளால் பாதிக்கப்பட்டிருப்பின் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தையோ அல்லது கணனி குற்றப்பிரிவின் துரித இலக்கங்களினையோ நாடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ம-7)

## மரண அறிவித்தல்

தோற்றம்
04 - 09 - 1949



மறைவு
26 - 07 - 2024

### ஐயாத்துரை சிவநேசன்

(உரிமையாளர் - சிவாஸ் ஸ்ரோர்ஸ், சின்னக்கடை)

புங்குடுதீவு 4 ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 10 ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் தற்போது வேம்படி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சிவநேசன் அவர்கள் 26.07.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முத்துவேல் - நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் கலைவாணியின் அன்புக் கணவரும் பாலரூபி(ரூபி)(RK Ceramic), கஜேந்திரநாத்(கஜன் - Ceat Kelani International Tyres (pvt) Ltd) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெகன்(RK Ceramic), அஜந்தா(கல்வி அமைச்சு - வடமாகாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கேசிகா, நிக்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஜெகநாதன் - கலைமணியின் (கனடா) அன்பு அத்தானும் ரவீந்திரநாதன் கருணாவதி(RK & Son Electronic), மன்மதராசா தனலட்சுமி(MMR Tyres and oil shop) ஆகியோரின் சம்மந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 28.07.2024 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் இடம்பெற்று அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக 10 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.37, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

071 789 6164 - கஜன்
077 024 3416 - ரூபினி
077 666 0699 - ஜெகன்

(1564)

தகவல்:
குடும்பத்தினர்


## வேலையாள் தேவை

மோட்டார் சைக்கிள் திருத்தும் நிலையத்திற்கு ELECTRICAL வயறிங், றிப்பியர் அனுபவம் உள்ள ஒருவர் தேவை. தங்குவதற்கு வசதி செய்து கொடுக்கப்படும்.

(C-865)

077 699 6501, 021 226 1747

## வேலையாட்கள் தேவை

உணவகமொன்றிற்கு ரொட்டி தயாரிப்பாளரும் உதவியாளரும் தேவை.

(1563)

077 629 0894

## வேலையாட்கள் தேவை

கொடிகாமம் நகரில் இயங்குகின்ற கிசோர் Multy Shop(fancy Shop) இற்கு அனுபவமுள்ள ஆண்,பெண் வேலையாட்கள் தேவை.

(196)

077 811 8948


## கிளி/ முக்கொம்பன் மகா வித்தியாலயம் வெள்ளி விழா தொடர்பான கலந்துரையாடல்

மேற்படி கலந்துரையாடல் எதிர்வரும் 11.08.2024 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 9.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெற உள்ளது. இதில் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், முன்னாள் பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அதிபர்
திரு.ப.ஜோயல் பியசீலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியான, சுதந்திரமான தேர்தலை எதிர்பார்க்கின்றோம்

## அமெரிக்க தூதுவர் ஜூலிசங்

(கொழும்பு)

**இலங்கையில் ஜனாதிபதி தேர்தல்கள் செப்டம்பர் 21 ஆம் திகதி நடைபெறும் என்ற தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிவிப்பை வரவேற்கின்றோம் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலிசங் தெரிவித்துள்ளார்.**



இது ஜனநாயகத்திற்கான இலங்கையின் நீண்ட கால அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துகின்றது.

இலங்கை மக்கள் தங்கள் எதிர்காலத்தை தீர்மானிக்கும் விதத்தில் அவர்களை வலுப்படுத்தும் நீதியான சுதந்திரமான தேர்தலை எதிர்பார்க்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# எத்தனை தடைவரினும் நீதித் திட்டம் நிறுத்தப்படாது

## பொதுப் பாதுகாப்பு அமைச்சர்

(கொழும்பு)



போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் குற்றவாளிகளுக்கு எதிரான நீதி நடவடிக்கைகள் எத்தகைய தடைகள் வந்தாலும் தடுக்கப்படாது என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் திரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

பதில் பொலிஸ் மா அதிபர் ஒருவர் சிபாரிசு செய்யப்பட் டுள்ளாரா என வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் நீதி நடவடிக்கைகளின் கீழ் கைது செய்யப்பட்ட போதைப் பொருள் கடத்தல் காரர்களை காப்பாற்றவும் கைதுகளை தடுக்கவும் பலர் முயற்சித்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் பொலிஸ் மா அதிபர் பதவியில் இல்லாவிட்டாலும் நீதித் திட்டம் நிறுத்தப்படாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பில் தலையிடமாட்டேன் - ஜனாதிபதி அதிரடி

(கொழும்பு)

பொலிஸ் மா அதிபரின் நியமனம் தொடர்பான விடயங்களில் தலையீடு செய்வதை தவிர்த்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிற்கு அறிவித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபரின் நியமனம் தொடர்பாக ஜனாதிபதிக்கு சட்ட ஆலோசனை கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தேர்தல் காலப் பகுதியில் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை பதில் பொலிஸ் மா அதிபரை நியமிக்க வேண்டிய தேவை ஏற்படும் எனவும் சட்டவல்லுநர்கள் ஜனாதிபதிக்கு எடுத்துரைத்துள்ளனர்.

மேலும் இந்த நியமனத்தை முன்னிலைப்படுத்தி மனுக்கள் தாக்கல் செய்ய முடியும் என்றும் சட்ட வல்லுநர்கள் ரணில் விக்கிரமசிங்கவிற்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

எனவே பொலிஸ் மா அதிபர் விடயத்தில் தலையீடு செய்வதை தான் தவிர்த்துக் கொள்வதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிற்கு அறிவித்துள்ளார். (நி-6)

# பொலிஸ் ஊடகப் பேச்சாளராக ருவன் குணசேகர நியமனம்

(கொழும்பு)



பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளராக பிரதிப் பொலிஸ் மா அதிபர் ருவன் குணசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளராக கடமையாற்றிய பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தனிப்பட்ட காரணங்களுக்காக வெளிநாடு சென்றுள்ளார்.

இதேவேளை நிஹால் தல் துவ நாடு திரும்பிய பின்னர், அவர் மீண்டும் பொலிஸ் ஊடகப் பேச்சாளராக பணியாற்று வார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

# வேட்பாளர்களுக்கான வைப்புத் தொகை அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக் கொள்ளும் திகதியான எதிர்வரும் ஓகஸ்ட் 15 ஆம் திகதிக்கு முந்தைய நாள் நண்பகல் 12 மணிக்கு முன்னர் அல்லது அதற்கு இடைப்பட்ட காலப் பகுதியினுள் வேட்பாளர்களின் வைப்புப் பணம் செலுத்தப்பட வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.


அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டு தேர்தல்கள் ஆணைக்குழு இதனை அறிவித்துள்ளது.

இதன்படி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியால் வேட்பாளராக முன்மொழியப்பட்டால், 50,000 ரூபாயும், வேறு அரசியல் கட்சியால் அல்லது வாக்காளர்களால் பரிந்துரைக்கப்பட்ட வேட்பாளராக இருந்தால், 75,000 ரூபாயும் வைப்புத் தொகையாக செலுத்தப்பட வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (நி-6)

# பொலிஸ் மா அதிபர் விவகாரம் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்கமாட்டோம்

## பிரதமர் அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)



பொலிஸ் மா அதிபரை சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்த உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தை ஏற்கமுடியாதென பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபர் பதவி வெற்றிடமில்லை எனவும், பதில் பொலிஸ் மா அதிபரை ஜனாதிபதியால் நியமிக்க முடியாது எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட அறிக்கையொன்றை ஆற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ள நிலையில், பதில் பொலிஸ் மா அதிபரை நியமிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை என பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய பொலிஸ் மா அதிபரே இன்னமும் பொலிஸ் மா அதிபராக பதவி வகிக்கின்றார் எனவும் பிரதமர் பாராளுமன்றத்தில் மேலும் தெரிவித்தார். (நி-6)

# சட்டத்தின் ஆட்சியை அரசு குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது

## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர்



(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் தொடர்பில் நீதிமன்றத்தின் உத்தரவினை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள மறுப்பது ஆபத்தான விடயம் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

உயர்நீதிமன்றத்தின் உத்தரவை ஏற்கமறுப்பதன் மூலம் நீதித்துறையின் சுதந்திரத்தையும், சட்டத்தின் ஆட்சியையும் அரசாங்கம் குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றது என அம்பிகா சற்குணநாதன் சமூக ஊடக பதிவில் தெரிவித்துள்ளார்.

தேசபந்து தென்னக்கோன் சித்திரவதையில் ஈடுபட்டார் என உயர்நீதி மன்றம் உறுதிப்படுத்தியதால் அவரை பொலிஸ் மா அதிபராக நியமித்திருக்க கூடாது என தெரிவித்துள்ள அவர் அரசாங்கம் நீதிமன்றத்தினை புறக்கணித்து அவரை நியமித்தது, பொதுச் சேவையை அரசியல் மயப்படுத்தியது என அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# மொட்டு வேட்பாளர்; திங்கட்கிழமை தீர்மானம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் தொடர்பான தீர்மானம் நாளை மறுதினம் திங்கட்கிழமை இடம் பெறவுள்ள அரசியல் சபைக் கூட்டத்தின் போது எட்டப்படவுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் இதனைத் தெரிவித்துள்ளார். கட்சியின், அரசியல் சபைக் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கான வலைப்பந்தாட்டம்



## வவு.சைவப்பிரகாசாவுக்கு-2 சம்பியன்கள் யாழ்ப்பாண கல்லூரிக்கு- 1 சம்பியன்

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டியில் இரு பிரிவில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியும் ஒரு பிரிவில் யாழ்ப்பாண கல்லூரியும் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டிகள் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில் 16 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணி 1 ஆம் இடம், அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி 2 ஆம் இடம் மற்றும் மன்னார் முருங்கன் மகா வித்தியாலய அணி 3 ஆம் இடத்தையும் பெற்றனர்.

18 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான போட்டியில் யாழ்ப்பாண கல்லூரி அணி 1 ஆம் இடம் , அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி 2 ஆம் இடம் , மன்னார் முருங்கன் மகா வித்தியாலய அணி 3 ஆம் இடத்தையும், 20 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான போட்டியில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி அணி 1 ஆம் இடம், அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி 2 ஆம் இடம், மன்னார் முருங்கன் மகா வித்தியாலய அணி 3 ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

2024 ஆம் ஆண்டுக்கான சிறந்த விளையாட்டு வீராங்கனையாக வவுனியா சைவப்பிரகாச மகளிர் வித்தியாலய வீராங்கனை தி.புவிகா தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-90)

# பாடுமீன் விளையாட்டுக்கழக கால்பந்தாட்ட இறுதியாட்டம் நாளை





யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் தமது வைரவிழாவை முன்னிட்டு நடத்தும் கால்பந்தாட்ட போட்டியின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை பாடுமீன் சென்ஜேம்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இரவு 7.30 மணிக்கு மின்னொளியில் இடம் பெறவுள்ளது.

நாவாந்துறை சென்மேரிஸ் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதவுள்ளது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்வர் உமரும் சிறப்பு விருந்தினர்களாக குருநகர் யாகப்பர் ஆலய பங்குத் தந்தை அருட்பணி அருளானந்தம் யாவிஸ், யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரி வைத்தியர் டேவிட் றொபின்சன், குருநகர் கடற்றொழில் அபிவிருத்தி சங்க தலைவர் யூவியஸ் சகாயராஜா, யாழ்.மாநகர சபை முன்னாள் முதல்வர் இமானுவேல் ஆனோல்ட், பிரான்ஸ் பாடுமீன் விளையாட்டுக் கழக செயலாளர் செபமாலை ஜெயசீலன், கார்மல் பூட் உரிமையாளர் ஜெயசீலன் பினா ஆகியோரும் கலந்து கொள்ள உள்ளனர். (நி-6-90)

# உஸ்டார் பொறித்த ஜெர்சியுடன் களமிறங்கும் இந்திய வீரர்கள்

இலங்கை சுற்றுப்பயணத்தில் இந்திய கிரிக்கெட் வீரர்கள் இரண்டு ஸ்டார் பொறிக்கப்பட்ட ஜெர்சியை அணிந்து விளையாட உள்ளனர்.

இன்று இடம்பெறவுள்ள முதல் ஆட்டத்தில் சூர்யகுமார் யாதவ் தலைமையிலான அணி, இலங்கை அணியை எதிர்கொள்கிறது.

இந்திய வீரர்கள் புதிய ஜெர்சியுடன் புகைப் படங்களுக்கு போஸ் கொடுத்துள்ளனர்.

இந் நிலையில் வேகப்பந்து வீச்சாளர்கள் முகமது சிராஜ் மற்றும் கலீல் அகமது இரண்டு நட்சத்திரங்களுடன் ஜெர்சியின் புகைப்படங்களை சமூக ஊடகங்களில் வெளியிட்டனர்.

இரண்டு குறுகிய உலகக் கோப்பை வெற்றிகளைக் குறிக்கும் வகையில் இந்திய கிரிக்கெட் வீரர்களின் ஜெர்சியில் பிசிசிஐ இரண்டு நட்சத்திரங்களை அச்சிட்டுள்ளது.

இலங்கைக்கு எதிரான இருபது-20 தொடரில் இந்திய அணி இந்த இரண்டு நட்சத்திர ஜெர்சியை அணிந்து விளையாடவுள்ளது.

மகேந்திர சிங் தோனியின் தலைமையின் கீழ் இந்தியா 2007 இல் முதல் இருபது-20 சாம்பியன் பட்டத்தை வென்றது.



அதன் பிறகு, ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணி கடந்த ஜூன் 29 ஆம் திகதி இரண்டாவது முறையாக இருபது-20 உலக கோப்பையை முத்தமிட்டு, 17 ஆண்டுகளாக காத்திருந்த கோடிக்கணக்கான இந்தியர்களின் கனவை நனவாக்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சூடுபிடிக்கும் ஜனாதிபதி தேர்தல்

## விதிகளை கடுமையாக்க தயாராகும் ஆணைக்குழு




(கொழும்பு)

**சுதந்திரமான தேர்தலுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் அரசியல் தலையீடுகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சுமார் 30 உற்சவங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

ஆணைக்குழுவிற்கு கிடைத்த முறைப்பாடுகளின் பிரகாரம் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அரசியல் தலையீடு காரணமாக வாக்காளர்களுக்கு நியமனம் வழங்கல், பொருட்கள் விநியோகம் போன்ற பல திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வ குழுக்கள் இவ்விடயத்தில் கடுமையாக செயற்படத் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)

## இலங்கை- இந்தியா இணைந்தே இனப்படுகொலையை செய்தன வெளிப்படுத்தியவர் விக்கிரமபாகு

### அனுதாப செய்தியில் சீமான்

(சென்னை)

கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ணவின் மறைவு குறித்து நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் துயரம் வெளியிட்டுள்ளார்.

தனது அனுதாபச் செய்தியில் சீமான் தெரிவித்துள்ளதாவது.

ஈழத்தில் தமிழர்களின் தன்னாட்சி உரிமைக்குக் குரல் கொடுத்த சிங்களப் பெருமகன், இலங்கையின் ஆதிகுடிமக்கள் தமிழர்கள் தான் என்பதை அரசியல் அரங்கில் அழுத்தமாகப் பதிவு செய்த மனிதநேய மாண்பாளர், புதிய சமசமாஜ கட்சியின் தலைவர் மதிப்பிற்குரிய ஐயா விக்கிரமபாகு கருணாரத்னவின் மறை வெய்திய செய்தியறிந்து அதிர்ச்சியும், துயரமும் அடைந்தேன்.

உண்மையான இடதுசாரி தலைவராகத் திகழ்ந்த ஐயா விக்கிரமபாகு கருணாரத்ன இலங்கை மக்களிடம் பொதுவுடைமை தத்துவத்தை விதைத்த பெருமைக்குரியவர்.

சிங்கள இனவெறியர்களின் கடும் எதிர்ப்பினையும் மீறி வாழ்நாள் முழுதும் தமிழரின் உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவளித்து துணைநின்றவர்.

2009 ஆம் ஆண்டு தமிழினப் படுகொலைக்குப் பிறகு ஈழத்தமிழர்கள் ஆதரவு நாடகத்தை அரங்கேற்ற சென்னையில் திமுக நடத்திய டெசோ கூட்டத்தில் அழைப்பின் பேரில் கலந்துகொண்ட விக்கிரமபாகு கருணாரத்ன அந்த கூட்டத்திலேயே இலங்கையும் இந்தியாவும் இணைந்தே தமிழினப் படுகொலைப் போரைச் செய்தது என்ற உண்மையைப் பகிரங்கமாக வெளிப்படுத்தி, அதன் காரணமாக திமுக பாராளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலுவால் இடைமறித்து பேச விடாமல் தடுக்கப்பட்டார்.

அத்தகைய தீரமிக்க அரசியல் போராளியின் மறைவு சிங்கள மக்களுக்கு மட்டுமல்லாது தமிழர்களுக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும்.(நி-6)

## முடியாவிட்டால் பதவி விலகுங்கள்

### சஜித் சவால்

(கொழும்பு)

உயர் நீதிமன்ற உத்தரவின்படி பதில் பொலிஸ் மா அதிபரை நியமிக்க முடியாவிட்டால் பதவி விலகுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சவால் விடுத்துள்ளார்.

உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள தடை உத்தரவை ஜனாதிபதி உறுதி செய்து, பதில் பொலிஸ் மா அதிபரை நியமிக்க வேண்டும் என சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

மேலும் அவர், "பொலிஸ் மா அதிபர் குறித்த பிரச்சினையில் இருந்து ஜனாதிபதி தப்ப முடியாது. இன்றும் அவர்தான் ஜனாதிபதி. அவர் ஜனாதிபதி வேட்பாளராக வந்தாலும் அவரது பொறுப்புகளில் இருந்து விலக முடியாது. பொலிஸ் மா அதிபர் இல்லாதபோது, பதில் பொலிஸ் மா அதிபரை நியமிப்பது அவரது பொறுப்பு. அதைச் செய்ய முடியாவிட்டால் ஜனாதிபதி பதவி விலக வேண்டும்.

இந்த நிலையில், ஜனாதிபதி அரசியல் சாசனத்துக்கு விரோதமான செயலில் ஈடுபட முயற்சிக்கிறார்" என குற்றம் சுமத்தியுள்ளார். (நி-6)

லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(181)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

## இராசிபலன்

27.07.2024
ஆடி 11 , சனிக்கிழமை,
சப்தமி பின்னிரவு 1.31 மணிவரை

ரேவதி பிற்பகல் 5.33 மணிவரை
சுபநேரம் -3.02-4.32 மணிவரை
இராகுகாலம் -9.02-10.32 மணிவரை

சந்திராஷ்டமம்.
ஆயிலியம்,மகம்.

வளவன்

**மேஷம்**: விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், திடீர் பயணங்கள் ஏற்படலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சஞ்சலங்களைத் தவிர்பது நல்லது.

**ரிஷபம்**: இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில அமையும், தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்**: மனநிறைவு கூடும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கைகூடும், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், முயற்சிகள் கைகூடும்.

**கடகம்**: பிற இனத்தவரால் ெருமைகள் வந்து சேரலாம்,தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், வழிபாட்டால் நம்பிக்கை கூடும், முன்னேறறம் பெற பெரிதும் பாடுபடுவீாகள்.

**சிம்மம்**: சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், தொழில் ரீதியாக சில குழப்பங்கள் தோன்றி மறையும், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**கன்னி**: கேலிக்கை கொண்டாட்டங்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, குடும்பத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**துலாம்**: நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, கடன் சுமை குறையும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்**: பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் விவகாரங்களில் அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு**: தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்,மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்,நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மகரம்**: உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவார், போசன சுகமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்**: குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், செல்வ நிலை உயரும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.


**மீனம்**: மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும், பெரிய மனிதர் களின் சந்திப்பு இடம்பெறலாம்.

அழகு மனிதனுக்கு இறைவன் அளித்துள்ள மகத்தான பரிசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விகாரை அமைப்பதற்காக இரவோடு இரவாக காணி துப்பரவு

## திருமலையில் பதற்றம்



(திருமலை)

திருகோணமலை - குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலந்தைக்குளம் பகுதியில் இரவோடு இரவாக பௌத்த விகாரை அமைப்பதற்காக காணி துப்பரவு செய்யப்பட்டதால் அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

குச்சவெளி - இலந்தைக் குளம் 5 ஆம் கட்டைப்பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவில் இருந்து பௌத்த பிக்கு ஒருவரின் தலைமையில் பௌத்த விகாரை அமைப்பதற்காக மக்களுடைய காணி துப்பரவு செய்யப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வயலுக்கு சென்ற மக்களால் குறித்த ஆக்கிரமிப்பு நடவடிக்கை அவதானிக்கப்பட்டு மக்களுக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து நேற்று வெள்ளிக் கிழமை குச்சவெளி பிரதேச செயலாளரின் கவனத்திற்கு குறித்த விடயம் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அதனைத் தொடர்ந்து குறித்த நடவடிக்கை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (நி-6)

# அபிவிருத்தி வேலைத்திட்ட மீளாய்வுக் கூட்டம்



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் நேற்று மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் பொது மக்களின் காணிப்பிணக்குகள் மற்றும் சட்டவிரோதமான மணல் அகழ்வு தொடர்பிலும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்போது கருத்துத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அரசாங்கத்தின் அபிவிருத்தி சார்ந்த வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவிப்புகள் தடையாக இருக்காது என தெரிவித்தார்.

கடந்த ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றங்கள் தொடர்பாக இதன் போது கலந்துரையாடப்பட்டன. (நி-6-100-315-316)



கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியில் ஓவியக் கண்காட்சி கல்லூரி முதல்வர் அ.பங்கையற்செல்வன் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (படம்: கிருஷ்ணகுமார்)

## தொழில் முனைவோருக்கான அமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.முகாமையாளர் நிறுவகம் (JMF) "சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோருக்கான வளர்ச்சி தொடர்பில் நுண்நிதி வழங்கல்" எனும் தொனிப் பொருளிலான கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் 11.30 மணிவரை யாழ். அரியாலையில் இல.146 புங்கன்குளம் வீதியில் உள்ள "ஜே" ஹோட்டலின் 3 ஆம் மாடியில் உள்ள யுகன் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வணிக மீள் எழுச்சியும் மறுவாழ்வும் எனும் பணிக்கு பொறுப்பான இலங்கை வங்கியின் துணைப் பொது முகாமையாளர் எஸ்.சிவாஞ்ஜன் சிறப்புரை ஆற்றவுள்ளனர். (நி-6)



வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய காம்யோற்சவம் பெருவிழாவின் திருக்கைலாச வாகனத்திருவிழா நேற்று முன்தினம் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்:சிவசாந்தன்)

# மன்னார் நோக்கி பயணித்த பேருந்து புத்தளத்தில் விபத்து

(மன்னார்)

கொழும்பில் இருந்து மன்னார் நோக்கி பயணித்த தனியார் சொகுசு பேருந்து நேற்றைய தினம் வெள்ளிக் கிழமை புத்தளம் காக்கா பள்ளிய பாதையில் விபத்துக் குள்ளாகியுள்ளது.

குறித்த பாதையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மோதி குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது

விபத்தின் போது பேருந்தில் பயணித்தவர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்பதுடன் எரிபொருள் நிரப்பும் இயந்திரத்தின் மேற்பகுதியும் பேருந்தும் பகுதியளவில் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-285)

# பவள விழாவை முன்னிட்டு கல்வி சார் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் பவள விழாவை முன்னிட்டு கல்வி சார் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் விழாக்குழுத் தலைவர் சங்கரப்பிள்ளை சாம்பசிவம் தலைமையில் இடம்பெறவுள்ளன.

கல்விசார் போட்டிகள் யாழ். மத்திய கல்லூரி அதிபர் சிவபாலன் இந்திரகுமார் நெறிப்படுத்தலில் இடம்பெறவுள்ளன. (நி-6)


# பூமியின் நீர்நிலைகளில் வேகமாக குறையும் ஒட்சிசன்

## எச்சரிக்கும் விஞ்ஞானிகள்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஆராய்ச்சியாளர்களால் சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வில் உலகின் நீர்நிலைகளில் உள்ள கரைந்த ஒட்சிசனின் அளவு வேகமாக குறைந்து வருவதாக கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணமாக காலநிலை மாற்றம் உள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

கடல், நதிஎன பூமியின் 70 சதவீத பரப்பு நீரினால் ஆனதாகும். உலகில் உயிர்கள் வாழ்வதற்கு அத்தியாவசிய தேவையும் நீரே ஆகும். இந்த சூழலில் நீர் நிலைகளில் ஒட்சிசன் அளவு குறைந்து வருவதால் நீரை சார்ந்துள்ள உயிர்க்கோலம் பெரும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளது. ஏனெனில் கரைந்த ஒட்சிசன் ஆனது கடல் மற்றும் நன்னீர் பரப்பில் வாழும் உயிரினங்களுக்கு இன்றியமையாததாகும்.



எனவே ஒட்சிசன் குறைவால் கடல் உயிரிகள் அழிவது உணவுச் சங்கிலியில் பிளவை ஏற்படுத்தும். மேலும் உலகத்திற்கு தேவையான 70% ஒட்சிசன் கடலிலிருந்துதான் உற்பத்தியாகிறது. ஆகையால் கடலில் ஒட்சிசன் அளவு குறைவது மனிதர்களுக்கு ஆபத்தாக மாறும் என்று ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கின்றனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத்தாக்கல்? - தயாசிறி



(கொழும்பு)
ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்படலாம் என பாராளு மன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக பாரா ளுமன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப் பிட்டார். அவர் மேலும் தெரி விக்கையில் உயர்நீதிமன்றத் தின் தீர்ப்பை சர்ச்சைக்கு உட்ப டுத்த வேண்டாம்.

அரசமைப்புக்கு இணங் கவே இந்த இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடைக்கு இணங்க, பதில் பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமிக்கும் அதிகா ரம் ஜனாதிபதிக்கு உள்ளது.

எனினும் பதில் பொலிஸ் மா அதிபரை அரசமைப்புச் சபையினால் நியமிக்க முடி யாது. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தித்தான், பதில் சட்டமா அதிபரைக்கூட ஜனா திபதி நியமித்தார்.

இதனை மீறினால் ஜனா திபதி பதவியிலிருந்து சென்றால்கூட அரசமைப்பை மீறியமைக்காக எதிர் காலத் தில் அவருக்கு எதிராக வழக் குகள் தாக்கல் செய்யப்படலாம்" என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர மேலும் தெரிவித்தார். (நி-6)

# ஒலிம்பிக் போட்டி; டூடுல் அறிமுகம்




(கொழும்பு)
பாரிஸில் ஆரம்பமான கோடைகால ஒலிம்பிக் போட்டி களின் தொடக் கத்தைக் கொண்டாடும் நோக்கில் கூகுள் நிறுவ னமானது புதிய டூடுலை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த ஆண்டு ஜூலை 26 முதல் ஓகஸ்ட் 11 வரை கோடைக்கால ஒலிம்பிக் போட்டிகளை பாரிஸ் நடத் துகின்ற நிலையில் விளை யாட்டு வீரர்கள் மற்றும் ரசிகர்கள் நிகழ்விற்கான எதிர்பார்ப்பைப் பகிர்ந்து கொள்வதால் பல்வேறு தளங்களில் உற்சாகமான பதிவுகள் குவிந்துள்ளன.

இந்த நிகழ்வைக் குறிக் கும் வகையில் தேடுதல் நிறுவனமானது அதன் முகப்புப் பக்கத்தில் "கூகுள்" லோகோவிற்குப் பதிலாக புதிய டூடுலை அறிமு ப் படுத்தி விளையாட்டுகளை விளையாடுவதைக் காட்டுகி றது. (நி-6)

# எச்.ஐ.வி தொற்றுக்கு மருந்து கண்டுபிடிப்பு

(கேப்டவுன்)
உலகம் முழுவதும் தற்போது எச்.ஐ.வி தொற்று அதிகரித்து வருகின்ற நிலையில் தென்னாபிரிக்கா அதற்கான மருந்தை கண்டுபிடித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள் ளது.


தென்னாபிரிக்காவின் கேப்டவுன் பல்கலைக்கழ கத்தின் எச்.ஐ.வி. மையத் தைச் சேர்ந்த ஆராய்ச்சி யாளர்கள், எச்.ஐ.வி. தடுப்பு மருந்துக்கான ஆய்வை நடத்தினர்.

அதன்போது கண்டு பிடிக்கப்பட்ட குறித்த தடுப்பு மருந்தானது 100 சதவீதம் செயற்றிறனைக் கொண் டுள்ளதாகத் தெரிவித்துள்ள னர்.

6 மாதத்துக்கு ஒன்று என ஊசி மூலமாக செலுத்திக்கொள்ள வேண் டிய இந்த மருந்து, எச்.ஐ.வி. தொற்றால் பாதிக்கப்பட் டவர்களுக்கு நோய் எதிர்ப் புச் சக்தியை அதிகரித்து விரைவில் குணமடையச் செய்யும் சாத்தியக்கூறு களை கொண்டுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் சுட் டிக்காட்டியுள்ளனர். (நி-6)

# மூன்று துறைகளும் முரண்படக் கூடாது

## கரு தெரிவிப்பு



(கொழும்பு)
தேர்தல் காலங்களில் நீதித்துறை, நிறைவேற்றுத்துறை, பாராளுமன் றத்துக்கிடையில் மோதல்களைத் தவிர்ப்பது முக்கியமானது என முன் னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர் தொடர்பில் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப் பட்டுள்ள இடைக்கால தடையுத் தரவை ஏற்றுக் கொள்ள முடியாது என பிரதமர் தினேஷ் குணவர்தன நேற்று வெள்ளிக்கிழமை காலை பாராளுமன்றத்தில் அறிவித்திருந் தார்.

தேர்தல் தொடர்பிலும் பொலிஸ் மா அதிபர் விவகாரம் தொடர்பில் பல தரப்பினராலும் பல்வேறு கருத் துக்கள் முன்வைக்கப்படுகின்ற நிலையிலேயே முன்னாள் சபா நாயகர் கருஜயசூரிய தனது எக்ஸ் பக்கத்தில் செய்துள்ள பதிவில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் காலங்களில் நீதித்துறை, நிறைவேற்றுத்துறை, பாராளுமன் றத்துக்கிடையில் மோதல்களைத் தவிர்ப்பது முக்கியம். சுயநலத்தை விட நாட்டின் எதிர்காலம் முக்கிய மானது என கரு ஜயசூரிய வலியு றுத்தியுள்ளார். (நி-6)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>2 இல் செவ்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: Surveyor<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/7575 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Bsc, Msc, Monitering evaluvation Officer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/10927 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 33 3/4<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: CIMA, Diploma in English, Computer Studies, Accountant (Pvt)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/11304 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>8 இல் செவ்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BBM, MBA, Banking Assistant<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: G/12780 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>12 இல் செவ்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: B.Com, DO<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/14027 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>7 இல் செவ்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: Bsc, MBA, Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: G/12171 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## வெள்ளத்தில் தத்தளிக்கும் மும்பை, புனே நகரங்கள்
# இதுவரை 6 பேர் உயிரிழப்பு



(டில்லி)
மகாராஷ்டிராவில் மும்பை, புனே நகரங்களில் கனமழை காரணமாக தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் தத்தளிக்கின்றன.


இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

புனே நகரில் தாழ்வான பகுதிகள் நீரில் தத்தளிக்கின்றன. குடியிருப்புகளை வெள்ளம் சூழ்ந்ததால் அவற்றில் வசித்த மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு வருகின்றனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேசிய பேரிடர் மீட்பு படையினர் மற்றும் இராணுவ வீரர்கள் மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். புனே மாவட்டத்தில் நேற்று முன்தினம் வெள்ளத்தில் மூழ்கி 3 பேரும் நிலச்சரிவில் சிக்கி ஒருவரும் உயிரிழந்தனர். இது போல் பிறபகுதிகளில் இருவர் உயிரிழந்தனர்.

மும்பையில் கன மழையால் விமான சேவை பாதிக்கப்பட்டது. நகரின் பல இடங்கள் மழையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. சுரங்கப் பாதைகள் நீரில் மூழ்கியுள்ளன. இதனால் வாகனப் போக்குவரத்துக்கள் முடங்கியுள்ளன. (நி-6)

# காசா பிரச்சினை தொடர்பில் அமைதியாக இருக்கப் போவதில்லை

## கமலா ஹரிஸின் நிலைப்பாட்டால் அமெரிக்க அரசியலில் பரபரப்பு



(வோஷிங்டன்)
இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடனான சந்திப்புக்குப் பின் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் போட்டியில் இருக்கும் கமலா ஹாரிஸ் தெரிவித்துள்ள கருத்து காசா பிரச்சினையில் அவரின் மாறுபட்ட நிலைப்பாட்டினை உணர்த்துவதாக அமைந்துள்ளது. இது அமெரிக்க அரசியலில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

நெதன்யாகுவுடனான சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த கமலா ஹாரிஸ் "தன்னைத் தற்காத்துக் கொள்ள இஸ்ரேலுக்கு உரிமை இருக்கிறது. அதேவேளையில் காசாவில் நிலவும் மனித துயரத்தின் வீச்சு பற்றிய எனது அக்கறையை நெதன்யாகுவிடம் மிகத் தெளிவாக முன்வைத்தேன். இதில் நான் அமைதியாக இருக்கப் போவதில்லை" என்று தெரிவித்தார்.

இஸ்ரேலிற்கு தன்னை பாதுகாப்பதற்கான உரிமையுள்ளது என குறிப்பிட்டுள்ள அவர் ஹமாஸ் அமைப்பினை ஈவிரக்கமற்ற யுத்தத்தினை தூண்டிய பயங்கரமான அமைப்பு என வர்ணித்துள்ளார்.

எனினும் இஸ்ரேல் எப்படி தன்னை பாதுகாத்துக் கொள்கின்றது என்பது முக்கியமான விடயம் என குறிப்பிட்டுள்ள அவர் காசாவில் இந்த துயரங்கள் நிகழும் போது நாங்கள் அதனை அலட்சியம் செய்ய முடியாது.

துன்பங்கள் குறித்து நாம் உணர்ச்சியற்றவர்களாகயிருக்க முடியாது. நான் மௌனமாகயிருக்கமாட்டேன். பாலஸ்தீன தேசத்தை ஏற்படுத்த வேண்டும் என கமலா ஹரிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கமலா இதனைத் தெரிவித்தபோது அவர் குரலில் இருந்த உறுதியும் கெடுபிடியும் இஸ்ரேல் பிரச்சினையில் கமலா ஹாரிஸின் நிலைப்பாடு பைடனுடையதிலிருந்து மாறுபட்டதாகவே இருக்கும் என்ற விமர்சனங்களை ஈர்த்துள்ளது.

இஸ்ரேல் போருக்கு பைடன் அரசு முழு ஆதரவு தெரிவித்து வருகிறமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# அதிவேக புகையிரதப்பாதைகளை சேதப்படுத்திய மர்ம நபர்கள்

## ஒலிம்பிக் விழாவிற்கான அச்சுறுத்தலா?



(பாரிஸ்)
பிரான்ஸின் பல்வேறு பகுதிகளில் அதிவிரைவு புகையிரம் செல்லும் பாதைகளை மர்ம நபர்கள் நேற்று சேதப்படுத்தியுள்ளனர்

தண்டவாளத்தை சேதப்படுத்துதல், தீ வைத்தல் போன்ற சம்பவங்களால் புகையிரத போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதுடன் பல புகையிரதங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இதனால் பயணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஒலிம்பிக் தொடக்க விழாவிற்கு சில மணிநேரங்களுக்கு முன்பு நடந்த இந்த சம்பவங்களுக்கு அதிகாரிகள் கண்டனம் தெரிவித்துள்ளதுடன் இது ஒலிம்பிக் விழாவிற்கு அச்சுறுத்தலாக இருக்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளனர். (நி-6)

# வெற்...
# போர்...
## அமெரிக்க...

(வோஷிங்டன்)—
ஹமாஸ் அமை...
கிடைக்கும் வரை ...
பிரதமர் பெஞ்சமி...
தெரிவித்தார்.

காசாவுக்கு எதிராக இஸ்ரேல் தீவிரமாக போர் நடத்தி வரும் நிலையில் அமெரிக்காவுக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இவரது வருகைக்கு எதிராக அமெரிக்காவின் பல்வேறு இடங்களில் தீவிர போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் அவர் அமெரிக்க பாராளுமன்றக் கூட்டத்தொடரில் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார்.

பாராளுமன்ற கூட்டத்துக்கு பெஞ்சமின் நெதன்யாகு வந்த

# ஆசிய-பசுபி...
# பறவைக் கா...
## ஐ.நா...

(ஜெனீவா)
ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் பறவைக் காய்ச்சல் பாதிப்புகள் அதிகரித்து வருவதாக ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வைரஸின் புதிய திரிபு தற்போது இனங்காணப்பட்டுள்ளதுடன் அதனைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் கடினமானதாக உள்ளதாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்போடியா, சீனா மற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வெளிநாடு

# ...ற்றி கிடைக்கும் வரை ...ர் நிறுத்தம் இல்லை!

### ...க்க பாராளுமன்றில் நெதன்யாகு உறுதி

...ன்)

...அமைப்புடனான போரில் முழுமையான வெற்றி ...ரை போரை நிறுத்தப் போவதில்லை என்று இஸ்ரேல் ...சமின் நெதன்யாகு, அமெரிக்க பாராளுமன்றத்தில்



போது அவையினர் எழுந்து நின்று தொடர்ந்து 8 நிமிடங்களுக்கு கரவொலி எழுப்பி அவரை வரவேற்றனர்.

அவர் உரையாற்றிக் கொண்டிருந்த போதும் 8 முறை அவையினர் எழுந்து நின்று கரவொலி எழுப்பி அவருக்கு ஆதரவு தெரிவித்தனர்.

சுமார் 50 நிமிடங்களுக்கு ஆவேசமாக உரையாற்றிய அவர் ஹமாஸ் அமைப்பை முழுமையாக வீழ்த்தி வெற்றி பெறும் வரை இந்தப் போரை நிறுத்தப் போவதில்லை என்று குறிப்பிட்டார்.

எனினும் இஸ்ரேலின் நிபந்தனைகள் ஏற்கப்பட்டால் போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்வது குறித்து பரிசீலிக்கத் தயார் என்றும் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீன அமைப்புகளுக்கும் இடையே தற்போது நடைபெற்றுவரும் போரானது நாகரீகத்துக்கும் காட்டுமிராண்டித்தனத்துக்கும் இடையிலான போர் என்றும் இந்தப் போரில் பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக போராட்டத்தில் ஈடுபடுவோர் ஈரானால் பயன்படுத்திக்கொள்ளப்படும் கைப்பாவைகள் என்றும் அவர் விமர்சித்துள்ளார்.

அத்தோடு காசா போர் விவகாரத்தில் இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் செயற்படுவது பாராட்டுக்குரியது என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் காசாவில் பாலஸ்தீனர்களுக்கு போதிய உணவு கிடைக்காமல் இருப்பதற்கு உணவுப் பொருட்களைக் கொண்டு செல்லவிடாமல் தடுப்பது காரணமல்ல என்றும் அம் மக்களுக்கு அனுப்பப்படும் பொருட்களை ஹமாஸ் அமைப்பினர் திருடிக்கொள்வதுதான் காரணம் என்றும் இஸ்ரேல் பிரதமர் தனது உரையில் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இவரது இந்தக் கருத்தானது பாலஸ்தீன பகுதிக்கான ஐ.நா. அகதிகள் நல அமைப்பின் கருத்துக்கு முற்றிலும் முரணானது என சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன. (நி-6)

# ...சுபிக் பிராந்தியத்தில் ... காய்ச்சல் அதிகரிப்பு

### ...நா எச்சரிக்கை




வியட்நாமில் அதிகமான தொற்று பதிவாகியுள்ளதுடன் மனித நோய்த் தொற்றுகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் பறவைக் காய்ச்சலின் நிலைமை மிகவும் கவலைக்குரியதாகும் என ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் பிராந்திய முகாமையாளர் கச்சென் வோங்சதா போர்ஞ்சாய் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பின்னணியில் கண்காணிப்பு அமைப்புகளை வலுப்படுத்தவும் கோழிப் பண்ணைகளில் உயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தல் மற்றும் பொது மக்களிடத்தில் விழிப்புணர்வை அதிகரிக்கவும் ஐக்கிய நாடுகள் சபையின் ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகளிடம் அவர் வலியுறுத்தியுள்ளார். (நி-6)

# எத்தியோப்பிய மண்சரிவு; உயிரிழப்பு 500 ஆக அதிகரிக்கலாம்

### ஐ.நா தெரிவிப்பு

(அபுஸ்அபாபா)

தெற்கு எத்தியோப்பியாவின் மண்சரிவுகளில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 257 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 500 ஆக அதிகரிக்கலாம் என ஐக்கிய நாடுகள் சபை நேற்று முன்தினம் வியாழக்கிழமை தெரிவித்துள்ளது.

பலத்த மழையினால் எத்தியோப்பியாவில் கோஃபா மண்டலத்தின் தொலைதூர மலைப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை மற்றும் திங்கட்கிழமை காலை மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. மண்சரிவுகள் ஏற்பட்ட கெஞ்சோ ஷாச்சா கோஸ்டி பகுதியில் சடலங்களையும் உயிர் பிழைத்தவர்களையும் மீட்பதற்கு மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

24 ஆம் திகதி வரை 257 பேர் உயிரிழந்துள்ளதாக பதிவாகியுள்ளது. எனினும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 500 ஆக அதிகரிக்கலாம் என மனிதாபிமான விவகாரங்களின் ஒருங்கிணைப்புக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம் தெரிவித்துள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலில் விஷம் கலப்பதனால்

## வருடத்திற்கு 1000 பேர் வரை உயிரிழப்பு

**(கொழும்பு)**

**உடலில் விஷம் கலப்பதனால் வருடத்திற்கு சுமார் 1000 பேர் வரை உயிரிழப்பதாக தேசிய வைத்தியசாலையின் விஷ தகவல் நிலையத்தின் பிரதானி வைத்தியர் ரவி ஜயவர்தன தெரிவித்துள்ளார்.**

அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு, அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உடலில் விஷம் கலந்ததன் காரணமாக வைத்தியசாலைகளுக்கு அனுமதிக்கப்படுபவர்களைக் காப்பாற்ற வைத்தியர்கள் முயற்சிக்கின்றனர்.

எனினும் உடலில் கலந்த விஷம் என்னவென்பது தொடர்பில் அறியாததன் காரணமாக அவர்களுக்குரிய சிகிச்சைகளை உடனடியாக வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக அவர்கள் உயிரிழப்பதாக அவர் தெரிவித்தார். (நி-6)

# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இருவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாகக் கொண்டு வரப்பட்ட 45 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இருவர் கட்டு நாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் டுபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இந்நிலையில், விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் இருவரும் கொண்டு வந்த பயணப்பொதிகளிலிருந்து 41,400 வெளிநாட்டு சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவருக்கும் எச்சரிக்கை விடுத்து அவர்களை விடுதலை செய்துள்ளனர். (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 250 | 150-200 | 300 |
| உருளைக்கிழங்கு | 220 | 260 | 250 | 260 | 280 |
| பச்சைமிளகாய் | 400 | 500 | 450 | 550-600 | 450 |
| தக்காளி | 350 | 300 | 450 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 180 | 140-150 | 200 |
| கோவா | 350 | 380 | 400 | 300 | 400 |
| கரட் | 400 | 450 | 480 | 350 | 600 |
| பூசணி | 200 | 220 | 230 | 180 | 280 |
| புடோல் | 160 | 280 | 180 | 200 | 200 |
| வாழைக்காய் | 200 | 250 | 250 | 160-200 | 280 |
| சின்ன வெங்காயம் | 300 | 280 | 400 | 250-500 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 250 | 250 | 280 |
| பாகற்காய் | 400 | 500 | 600 | 400 | 600 |
| வெண்டக்காய் | 200 | 200 | 200 | 260 | 300 |
| கருணைக்கிழங்கு | 180 | 160 | 180 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 220 | 150 | 150-200 | 200 |
| லீக்ஸ் | 450 | 500 | 550 | 400 | 600 |
| பீற்றூட் | 400 | 350 | 400 | 450 | 300 |
| கறிமிளகாய் | 800 | 900 | 850 | 400 | 1200 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 200 | 100-130 | 400 |
| போஞ்சி | 600 | 700 | 650 | 450 | 900 |
| கத்தரி தம்புள்ள | 200 | 150 | 250 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 100 | 50 | 60 | 60 | 100 |
| தேசிக்காய் | 600 | 600 | 600 | 500-560 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 90 | 60-120 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 650 | -- | 700 |
| வெங்காயப்பூ | 200 | 300 | 400 | - | 400 |
| முள்ளங்கி | 100 | 120 | 120 | 150 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 60 | 100 | 80 |
| ஈரப்பலா | 100 | 80 | 60 | 100 | 60 |

# இன்று ஒரு தகவல் 195



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பூமியின் சொர்க்கம்

ஒரு நாள் ஒரு பெரியவர் வந்தார். ஆழ்நிலை தியானம் எல்லாம் செய்பவர். ஒரு பெரிய மகானுடன் தொடர்புள்ளவர். அவரிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தேன். என்ன சார் உலகம் முழுவதும் எங்கு பார்த்தாலும் சண்டை சச்சரவாக இருக்கின்றது. வருங்காலங்களிலே மனிதன் நிம்மதியாகவே வாழமுடியாது போல் இருக்கிறதே என்றேன். அதற்கு யார் காரணம் என்று நினைக்கின்றீர்கள்? என்றார். தெரியவில்லையே என்றேன். மனிதன் தான் காரணம் என்றார். மனிதன் மனது வைத்தால் இந்த பூமியை சொர்க்கமாக மாற்ற முடியும் சார். இது ஏதோ பேச்சுக்காக சொல்கின்ற வார்த்தை இல்லை. நிஜம் என்றார்.

ஆர்வமாக அவர் சொல்வதை காது கொடுத்து கேட்க ஆரம்பித்தேன். அவர் சில விஞ்ஞான உண்மைகளை சொன்னார். ஒரு சோதனை நடந்ததாம். ஒரு மாதிரியான இரண்டு தோட்டம். அதிலே ஒரு தோட்டத்தில அந்த தோட்டக்காரர் அங்கே இருந்த செடி, கொடிகளை மிகவும் அன்பாகவும் கனிவாகவும் கவனித்துக் கொண்டார். இன்னொரு தோட்டத்தில் உள்ள செடி, கொடிகளை மிகவும் வெறுப்பாகவும் எறிச்சலாகவும் கவனித்துக் கொண்டார். அன்பாகவும் கனிவாகவும் கவனித்துக் கொண்டு வந்த செடி, கொடிகள் விரைவாகவும், வலுவாகவும் வளருதாம். வெறுப்பாக கவனித்துக் கொண்டு வந்த தோட்டம் அந்த அளவிற்கு வளரவில்லையாம். ஆச்சரியமாகத் தான் இருக்கிறது.

இன்னொரு சோதனை ஒரு தோட்டத்தில் இருந்த தோட்டக்காரருக்கு ஒரு பெரிய கத்திரிக்கோலை இரண்டு கைளிலேயும் பிடித்துக் கொண்டு தேவையில்லாத கிளைகளை வெட்டிவிடுவது தான் வேலை. இந்த தோட்டக்காரர் ஒரு நாள் இன்னொரு தோட்டத்திற்கு போனார். அங்கே இருந்த தன்னுடைய நண்பனை பார்ப்பதற்காக. இவர் அங்கே சென்றவுடனே அங்கேயிருந்த சில நுட்பமான செடிகள் இவர் வெட்டுவதற்கு தான் வருகின்றார் என்று நினைத்து தனது இலைகளை சுருக்கிக் கொள்ள ஆரம்பித்ததாம். இதிலே இருந்து என்ன தெரிகின்றது என்றால் மனிதனுடைய எண்ணஅலைகள் இன்னொரு பொருளையும் பாதிக்கின்றது என்பது தான்.

ஒரு தனிமனிதனுடைய எண்ணம், சொல், செயல் இந்த பிரபஞ்சத்திலே ஒரு பாதிப்பை ஏற்படுத்த முடியும் என்பது உண்மை. எல்லோரும் நல்ல மாதிரியாக நினைத்தால் உலகத்திலே நல்லது பெருகும், கேட்டது குறையும். சரி! நல்ல எண்ணம் என்பது என்ன? இயற்கையின் விதிகளைப் புரிந்து கொண்டு அதன் மீதான அதனுடன் ஒத்துப் போகின்ற எண்ணம் தான் நல்ல எண்ணம். நமது வாழ்கை ஒரு சங்கிலி தொடர் போன்று உணர்வுபூர்வமாக இணைக்கப்பட்டிருக்கின்றது.

ஒருவருடைய உடலிற்கோ, மனதிற்கோ ஒரு அதிர்ச்சியால் பாதிப்பு ஏற்படுகின்றது என்று வைத்துக் கொள்ளுங்கள். அது அவனுக்கு இரத்த சம்பந்தமுள்ள அல்லது கடமை சம்பந்தமுள்ள மற்றவர்களுடைய உடலிலும், மனதிலும் ஓரளவு பாதிப்பை ஏற்படுத்தும். இயற்கையினுடைய இந்த விதிப்படி தான் எண்ண அலைகள் அடுத்தவர்களை பாதிக்கின்றது. சிலர் வாழ்த்தினாலும், திட்டினாலும் அது ஒரு Radio active function மாதிரி அடுத்தவர்கள் மேலே ஒரு அழுத்தத்தை உண்டு பண்ணுகின்றது. இப்போது உலகம் முழுவதும் அங்கங்கே குழப்பங்கள் அழிவுகள் அடிக்கடி நடக்கின்றது. இது எதானலே என்று நினைக்கின்றீர்கள்?

மனிதர்களுடைய ஒட்டுமொத்தமான எண்ணஅலைகள் டென்சன் வெளியே விடப்படுகின்றதே அதனாலே தான். இந்த அண்டவெளி ஒரு குறிப்பிட்ட அளவிற்கு தான் கெட்ட எண்ணங்களை தாங்க முடியும். அளவிற்கு மீறிப் போனால் நெருக்கடி, கலவரம், சண்டை The atmosphera can bear negative thoughts only ture a certain extent and finally dursts in to crisis, riots and wars.

வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பது வெறும் திண்ணைப் பேச்சு இல்லை. அது விஞ்ஞான பூர்வமான உண்மை. இப்படி இவ்வளவு விடயத்தையும் என்னைப் பார்க்க வந்த பெரியவர் விவரமாக எடுத்து சொன்னார். இருந்தாலும் எனக்கு அதை அப்படியே எடுத்துக் கொள்வதற்கு கஷ்டமாகத்தான் இருந்தது. இன்னொன்றும் சொன்னார். இந்த விஞ்ஞான உண்மைகளை எல்லாம் எல்லாப் பாடசாலைகளிலும் குறைந்தது மூன்றாவது வகுப்பிலிருந்தாவது குழந்தைகளுக்கு போதித்தால் வருங்காலத்திலே நல்ல விதமான எண்ண அலைகள் இந்த பிரபஞ்சத்திலே பரவும். அதன்பின் இந்த பூமியே சொரக்கமையமாக மாறும் என்றார்.

இது சிந்திக்க வேண்டிய ஒரு விடயம் தான். உலக சமாதானத்திற்காக அணு ஆயதங்களை குறைக்கின்றோம் என்று ஒரு பக்கம் முடிவு செய்தாலும் குழந்தைகளை நல்லவிதமாக வளர்க்க வேண்டும் என்பதும் ஒரு முக்கியமான விடயம். அதை யாரும் மறுக்க முடியாது. இந்த பூமியை சொர்க்க மயமாக மற்ற வேண்டும் என்று கடவுளே ஒரு தரம் நினைத்தாராம். உடனே புறப்பட்டு பூமிக்கு வந்து சேர்ந்தார்.

மனிதனுடைய குறை முழுவதையும் நிவர்த்தி செய்து விடுவோம் என்று ஆரம்பித்தார். முதலிலே ஒரு ஆளைப்பார்த்தார்.அவன் அழுது கொண்டிருந்தான். ஏன் அழுகின்றாய் என்றார்? 10 ரூபாயை தொலைத்து விட்டேன் அது தான் அழுகின்றேன் என்றான். பரவாயில்லை அதற்காக கவலைப்படாதே நான் பத்து ரூபாய் தருகின்றேன் என்று சொல்லி 10 ரூபாயை கொடுத்தார். அதை வாங்கிய வுடன் இன்னமும் பலமாக அழ ஆரம்பித்தான். மறுபடியும் ஏன் அழுகின்றாய் என்றார். நான் தொலைத்த பத்து ரூபாயும் இருந்தால் இப்போது என் கையில் 20 ரூபாய் இருந்திருக்குமே என்று சொல்லிவிட்டு தேம்பி தேம்பி அழ ஆரம்பித்துவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிநீர் நெருக்கடிக்கு தீர்வு; அரசின் வேலைத்திட்டம் ஆரம்பம்

## — வடக்கு மாகாண ஆளுநர் —

**(யாழ்ப்பாணம்)**

**குடிநீர் பிரச்சினைகளுக்கு தீர்வாக போதியளவு விநியோகத்தை வழங்குவதற்காக அரசாங்கம் 5 குடிநீர் திட்டங்களை முன்னெடுத்துள்ளதாக வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.**



வடமாகாண அபிவிருத்தி தொடர்பான விசேட செய்தியாளர் மாநாட்டில் நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் உரையாற்றும் போதே வடமாகாண ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறிப்பாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும், அவற்றில் 2 திட்டங்கள் அடுத்த வருடத்திற்குள் பூர்த்தி செய்யப்பட உள்ளதாகவும் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை வட மாகாணத்தில் 97 சதவீத கண்ணிவெடி அகற்றும் பணிகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளதாகவும் மேலும் சில பகுதிகளில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் கைவிடப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் அவை மிகவும் வெற்றிகரமாகஅகற்றப்படும்எனவும்ஆளுநர்தெரிவித்தார். (நி-6-33)

# 130 பேருக்கு எதிரான வழக்கு தவணையிடப்பட்டுள்ளது

(நெளுக்குளம்)

வனஜீவராசிகள் திணைக்களத்தினால் 130 பேருக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கு தவணையிடப்பட்டுள்ளது.

கரியல்வயல் , சுண்டிக்குளம் பகுதிகளை அண்மித்துள்ள மக்கள் 130 பேருக்கு எதிராக வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் தொடுக்கப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் முல்லைத்தீவு நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

1908 ஆம் ஆண்டு தொடக்கம் மக்கள் பயிர் செய்து வாழ்ந்துவரும் நிலையில் குறித்த இடத்தில் உள்ள மக்கள் தம் காணிகளை துப்பரவு செய்தமையை அடுத்து வனஜீவராசிகள் திணைக்களத்தினர் அது தமக்குரிய காணி என முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த வழக்கானது கடந்த வருடம் 7.12.2023 அன்றையதினம் இடம்பெற்று 02.05.2024 வழக்கு தவணையிடப்பட்டிருந்தது.

அதற்கமைய குறித்த வழக்கானது விசாரணைக்காக முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.குறித்த வழக்கானது மூன்றாக பிரித்து இம்மாதம் யூலை 19, 25, 26 ஆம் திகதிகளுக்கும் தவணையிடப்பட்டிருந்தது.

அதற்கமைய கடந்த 19 ஆம் திகதி அன்று இடம்பெற்ற வழக்கிற்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் 13 ஆம் திகதிக்கும், நேற்று முன்தினம் இடம்பெற்ற வழக்கிற்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் 20 ஆம் திகதியும் தவணையிடப்பட்டுள்ளது. (நி-6-299)

# கந்தன் குளத்தில் சிறுபோக நெல் அறுவடை விழா



(கிளிநொச்சி)

கிளிநொச்சி செல்வாநகர் விவசாய போதனாசிரியர் பிரிவில் கந்தன் குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கையில் நெல் விதைப்பு முறையான பரசூட் முறையிலான விதைப்பில் ஈடுபட்ட விவசாயி ஒருவரின் வயலில் அறுவடை விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

குறித்த அறுவடை நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் சூ.ஜெகதீஸ்வரி கலந்து கொண்டு அறுவடையை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில், பரந்தன் விவசாயக் கல்லூரியின் விரிவுரையாளர் ம.ரஜீதன் மற்றும் பாட விதான உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள், விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர். (நி-6-315)

# விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்ட கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்திற்கு கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள கரைச்சி பிரதேச செயலகத்திற்கான அறிமுகக் கூட்டம் கடந்த புதன் கிழமை கரைச்சி பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் பூ.ராஜ்வினோத் தலைமையில் இடம் பெற்றது.

இக் கலந்துரையாடலில் விவசாய நவீனமயமாக்கல் பிரிவின் பணிப்பாளர் நிலந்தி பெரேரா கலந்து கொண்டு இத்திட்டம் தொடர்பான தெளிவூட்டலை வழங்கியிருந்தார்.

இத்திட்டத்தின் கீழ் விவசாய நவீனமயமாக்கல் செயற்பாடுகளுக்காக ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடன்களை வழங்குவதற்கு 25 மில்லியன் ரூபாய் கரைச்சி பிரதேச செயலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் குறித்த திட்டத்தின் கீழ் வட்டியில்லா கடன் வசதிகள் பிரதேச அபிவிருத்தி வங்கி, இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஊடாக வழங்கப்படவுள்ளது.

கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளர், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்), அரச வங்கிகளின் முகாமையாளர்கள், பிரதேச செயலக நிர்வாக கிராம அலுவலர், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முதற் கட்டமாக இத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் கலந்து கொண்டனர்

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து மிளகாய், நிலக் கடலை மற்றும் கெக்கெரி பயிர்ச் செய்கை குறித்த நவீன மாக்கல் திட்டத்திற்காக முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# வவுனியா இரட்டைக்கொலை சந்தேக நபர்களின் மறியல் நீடிப்பு

(குருமன்காடு)

இரட்டைக்கொலை சந்தே நபர்களின் விளக்கமறியலை நீடித்து வவுனியா மேல் நீதி மன்ற நீதிபதி மாணிக்கவாசர் இளஞ்செழியன் கட்டளை பிறப்பித்துள்ளார்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த வருடம் யூலை மாதம் 23 ஆம் திகதி அதி காலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவர் மரணமடைந்திருந்தனர். குறித்த இரட்டைக் கொலை சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் கைதான 7 பேரிடம் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன், அந்நபர்களை நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஒரு வருடமாக வழக்கு இடம்பெற்று வருவதுடன் சந்தேக நபர்கள் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர். இந்நிலையில் பிணைக்கு எதிராக விளக்கமறியல் நீடிப்பது தொடர்பாக சட்டப்பிரிவு 17 இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு மேல்நீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணை தொடர்பில்கவனம் செலுத்திய மேல் நீதி மன்று, சந்தேக நபர்களது விளக்கமறியலை நீடித்து கட்டளை பிறப்பித்தது. இதன் படி மன்று 1- 6 வரையான சந்தேக நபர்களுக்கு எதிர்வரும் நவம்பர் 1 ஆம் திகதி வரை விளக்க மறியல் நீடித்து கட்டளை வழங்கியதுடன், 7 ஆவது சந்தேக நபரான பிரதான சந்தேகநபருக்கு எதிர் வரும் பெப்ரவரி 25 வரை விளக்கமறியலை நீடித்து கட்டளை பிறப்பித்தது. (நி-6-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 543





புதரில் ஒரு முனை கட்டியிருந்த சேந்தன் அமுதனின் மேல் துண்டைப் பூங்குழலி சுட்டிக் காட்டினாள். பாவம்! அவளால் பேச முடியவில்லை.

"சேற்றில் அமிழ்ந்திருப்பான் என்று நினைக்கிறாயா? இல்லை, இல்லை! ரவிதாஸனை அப்படியெல்லாம் கொன்று விட முடியுமா? அவனுக்கு நூறு உயிர் ஆயிற்றே? தப்பிப் போயிருப்பான்!" என்று சொல்லிக் கொண்டே வந்தியத்தேவன் புதரில் கட்டப்பட்டிருந்த துண்டை அவிழ்த்து எடுத்துக் கொண்டான். பூங்குழலிக்கு ஆறுதலாக அவ்விதம் சொன்னானே தவிர, அவன் மனத்திற்குள், 'ரவிதாஸன் மாண்டு தான் போயிருப்பான் அவனுக்கு இந்தக் கோர மரணம் வேண்டியதுதான்!' என்ற எண்ணமும் தோன்றியது.

இருவரும் அங்கே மேலும் நிற்பதில் பயனில்லை என்பதை ஒருங்கே உணர்ந்தார்கள். மீண்டும் கால்வாயை நோக்கி நடந்தார்கள்.

கால்வாயின் கரைகளை அங்கே இருபுறமும் மரங்கள் மறைத்துக் கொண்டிருந்தன. ஒரு மரக்கிளையைப் பிடித்துக் கொண்டு நின்று இரு உருவங்கள் எட்டிப் பார்த்தது தெரிந்தது. அவற்றில் ஒன்று ஆண் உருவம் இன்னொன்று பெண் உருவம்.

"அதோ!" என்று பூங்குழலி சுட்டிக் காட்டினாள்."

"ஆமாம் அவர்கள் யார் என்று தெரிகிறதா?"

"மந்திரவாதி ஒருவன்! இன்னொருத்தி என் அண்ணன் மனைவி எனக்கு முன்னால் அவள் வந்து மந்திரவாதியை விடுவித்திருக்கிறாள்."

"நல்லதாய்ப் போயிற்று."

"நல்லது ஒன்றுமில்லை. கால்வாயில் படகு வருவதை அவர்கள் உற்றுப் பார்க்கிறார்களே?"

அச்சமயம் இரண்டு உருவங்களில் ஒன்று திரும்பி இவர்கள் வரும் திசையைப் பார்த்தது. உடனே இரண்டு உருவங்களும் புதர்களும் அடியில் மறைந்து விட்டன. "ஐயோ! அவர்கள் நம்மையும் பார்த்து விட்டார்கள்!"

"பேசாமல் என்னுடன் வா! நான் ஒரு யுக்தி செய்கிறேன். நான் என்ன சொன்னாலும் ஆச்சரியப்படாதே! என்னை ஒட்டியே பேசு!" என்றான் வந்தியத்தேவன்.

இருவரும் மேற்கூறிய உருவங்கள் நின்ற இடத்துக்குச் சமீபமாகப் போனார்கள். அந்த இடத்தைக் கடந்து சிறிது அப்பால் சென்று கால்வாயின் ஓரமாக உட்கார்ந்து கொண்டார்கள். பின்னால் புதரில் மறைந்திருந்தவர்களுக்குத் தங்கள் பேச்சு நன்றாய்க் கேட்கும் என்று வந்தியத்தேவன் நிச்சயப்படுத்திக் கொண்டான்.

"பூங்குழலி! இதோ பார்! ஏன் கவலைப்படுகிறாய்? மந்திரவாதி செத்து ஒழிந்து போனான். போனதே க்ஷேமம்" என்றான் வந்தியத்தேவன்.

"ஐயோ! என்ன பயங்கரமான சாவு!" என்றாள் பூங்குழலி. "கொலை செய்தது செய்து விட்டு, இது என்ன பரிதாபம்?"

"ஐயோ! நானா கொலை செய்தேன்?"

"பின்னே அவன் சேற்றில் விழச் செய்தது யார்? நீ தானே? திடீரென்று அப்புறம் உனக்குப் பச்சாத்தாபம் வந்துவிட்டது. தப்புவிக்கலாம் என்று வந்தாய்! அதற்குள் அவனை சேறு விழுங்கி விட்டது. தப்புவிக்கத் தான் வந்தாயோ, அல்லது செத்துப் போய் விட்டானா என்று பார்ப்பதற்குத்தான் வந்தாயோ. யார் கண்டது?"

"உன்னை யார் என்னைத் தொடர்ந்து வரச் சொன்னது?"

"வந்ததினால்தானே நீ செய்த கொலையைப் பற்றித் தெரிந்து கொள்ள முடிந்தது? அடி கொலை பாதகி!"

"நானா கொலை பாதகி!"

"ஆம், நீ கொலை பாதகி தான்! நான் மட்டும் யோக்கியன் என்று சொல்கிறேனா? அதுவும் இல்லை. நான் இளவரசரைக் கடலில் முழுக அடித்துக் கொன்றேன். நீ மந்திரவாதியைச் சேற்றில் அமுக்கிக் கொன்றாய்.

அதற்கும் இதற்கும் சரியாகப் போய் விட்டது. நான் செய்த கொலையைப் பற்றி நீ வெளியில் சொல்லாமலிருந்தால், நீ செய்த கொலையைப் பற்றி நானும் யாரிடத்திலும் சொல்லவில்லை!"

(தொடரும்...)





# சிறுவர் அரங்கம்

## மலைப்பாம்பும் மான்குட்டியும்

(நேற்றைய தொடர்ச்சி...)

குட்டி பெரிய தனது உடலை வளைத்து நெளிந்த படி மறைவிடம் நோக்கி நகர ஏதோ அரவம் கேட்டது.

அதே மான்குட்டி தனியாக வந்தது.

"என் கடமை முடிந்தது எனது வார்த்தையை நான் காப்பாற்றி விட்டேன். உனக்கு எனது நன்றி" என்று சொன்னவாறு குறட்டியின் முன்னால் வந்து நின்றது மான் குட்டி.

குறட்டியின் முரட்டுத் தோலையும் மீறி அதன் உடல் புல்லரித்தது.

"என்னைப் பற்றியா சொன்னாய்" என்றது குறட்டி. "இல்லை எனக்கு உதவி செய்த உன்னை காட்டிக் கொடுக்க மாட்டேன்."

"உன்னை கொன்று தின்னப் போகும் நான் எப்படி உனக்கு உதவியவன் ஆவேன்?"

"நீ சொன்னது சரி தான். ஆனால் நீ உதவாவிட்டால் என் அம்மாவைக் காப்பாற்ற முடியாது போயிருக்கும். பெற்றோருக்காக தனது உயிரைத் தருவதைவிட பெருமை தரக்கூடிய விடயம் உலகத்தில் வேறு என்ன இருக்க முடியும்?"

குறட்டி தனது தலையை மெல்ல உயர்த்தி மான்குட்டியின் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தது.

"தாய்க்காக தனது உயிரை தரத் துணிந்த உன்னை வணங்கினாலே. எனக்குப் பெருமை" என்று சொல்லியபடி குறட்டி அதனை உயிரோடு விட்டுச் சென்றது.

மான்குட்டி குறட்டியை ஆச்சரியமாகப் பார்த்துது.

மரக்கிளைகளில் தவழ அதன் உடம்பின் கரும்புள்ளிகள் வைரமாக மின்னின.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் சரியான பாதையை தேர்ந்தெடுத்தோமே யானால் நிச்சயம் இலக்கை அடைவோம் என்ற நம்பிக்கையோடு நடைபோடலாம். ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஒலித்தது சங்கநாதம் திறந்தது தேர்தல் களம்

ஜனாதிபதித் தேர்தல் நடக்குமா? இல்லையா? என்ற வாதப் பிரதிவாதங்களின் மத்தியில் தேர்தல் ஆணையம் சங்கொலி எழுப்பி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமென அறிவித்துள்ளது.

அப்பாடா! எங்கே ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைத்து தனது பதவிக்காலத்தை ரணில் விக்கிரமசிங்க நீடித்துவிடுவாரோ என்ற ஏக்கம் ஒரு மாதிரியாக நீங்கிப் போயிற்று.

இனி தேர்தலில் களமிறங்குகின்ற ஏற்பாடுகள் மட்டுமே உள்ளன.

அதிலும் சில அரசியல் கட்சிகள் ஏலவே தேர்தலுக்கு ஆயத்தமாகிவிட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எதுஎவ்வாறாயினும் இம்முறை நடைபெறப் போகின்ற ஜனாதிபதித் தேர்தல் நாடு முழுமையிலும் சூடுபிடிக்கும் என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

அதற்குக் காரணமும் உண்டு. 2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ 63 இலட்சம் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இருந்தும் அரகல போராட்டம் காரணமாக ஜனாதிபதிப் பதவியைத் துறந்து நாட்டைவிட்டு தப்பியோடுகின்ற பரிதாபநிலைக்கு அவர் ஆட்பட்டபோது, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார்.

உண்மையில் மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்தபோது, அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சஜித் பிரேமதாஸவை அழைத்து பிரதமர் பதவியைப் பொறுப்பேற்குமாறு கேட்டுக் கொண்டார். ஆனால் அதற்கு சஜித் பிரேமதாஸ உடன்படவில்லை.

அதற்குப்பின்னரே ரணில் விக்கிரமசிங்கவை கோட்டாபய ராஜபக்ஷ அழைத்தார்.

காலம் கனியும் வரை காத்திருந்த ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்டதன் காரணமாக தொடர்ந்து ஜனாதிபதியாக நியமனம் பெறுகின்ற வாய்ப்பை தனதாக்கிக் கொண்டார்.

ஆக, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக ஆட்சி செய்தாராயினும் அவர் மக்களால் தெரிவு செய்யப்படாத ஜனாதிபதி என்பது இங்கு ஈண்டு கவனிக்கத்தக்கது.

அதேநேரம் ஆட்சிப்பீடத்தில் இருந்து மக்களால் துரத்தப்பட்ட ராஜபக்ஷ தரப்பு நடக்கப் போகும் ஜனாதிபதித் தேர்தலில் நேரடியாகப் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பம் அறவே இல்லை எனலாம்.

அதாவது மொட்டுக் கட்சியின் ஆதரவுடன் ஒருவரை நிறுத்தி, அவரை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வைப்பதுதான் அவர்களின் கதி என்றாயிற்று.

இந்த நிலையில் நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தல் முன்னெப்போதும் இல்லாத அளவில் சூடுபிடிக்கும். சில வேளைகளில் தேர்தல் காலங்களில் தென்பகுதியில் சூடும் பிடிக்கும் வாய்ப்பு உண்டு.

நிலைமை இதுவாக இருக்கையில் நடக்கப் போகும் ஜனாதிபதித் தேர்தலில் தனி உபயமாக நாங்களும் ஒரு குட்டித் திருவிழா செய்ய நினைத்துள்ளோம். இந்தத் திருவிழாவில் தர்ப்பை அணிந்து சங்கல்பம் இருப்பது யார் என்பதுதான் தெரியவில்லை.

எது எவ்வாறாயினும் நடக்கப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிய உத்தரவாதங்கள் முன் வைக்கப்படும் என்பது மட்டும் உறுதி.

# விஜேயதாச ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அல்ல

## சு.க பொதுச் செயலாளர் தயாசிறி

*(கொழும்பு)*

வேட்பாளரொருவரை களமிறக்கி வெற்றி பெறக்கூடிய நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இல்லை என்பதே யதார்த்தமாகும். அதே வேளை சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிப்பதற்கும் நாம் தீர்மானிக்கவில்லை. விஜேயதாசராஜபக்ஷவை வேட்பாளராக நாம் முன்னிலைப்படுத்தவுமில்லை என்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் சு.க.வின் தீர்மானம் குறித்து வினவிய போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் தேர்தலில் களமிறங்குவதற்கு இது வரையில் வேட்பாளர் ஒருவர் தெரிவு செய்யப்படவில்லை. யாரை முன்னிலைப்படுத்துவது என்ற தீர்மானத்தை எடுக்க வேண்டியுள்ளது. அமைப்பாளர்கள், தொகுதி அமைப்பாளர்களுக்கு கலந்துரையாடலொன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளேன். அவர்களுடனும் ஏனைய உறுப்பினர்களுடன் பேசி தீர்மானமொன்றைஎடுப்போம்

அத்தோடு தேர்தலில் களமிறங்குவதாக அறிவித்துள்ள எந்தவொரு வேட்பாளருக்கும் ஆதரவளிப்பதாக சுதந்திரக்கட்சி எவ்வித தீர்மானத்தையும் எடுக்கவில்லை. நாடு மற்றும் கட்சியின் எதிர்காலம் தொடர்பில் சிந்தித்து பொருத்தமானதொரு தீர்மானத்தை எடுப்போம்.

விஜேயதாச ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளர் அல்ல. சுதந்திரக்கட்சியில் எவரும் தீர்மானத்தை முன்வைத்து அவரை வேட்பாளராகக் களமிறக்கவுமில்லை. வேட்பாளர் ஒருவரைக் களமிறக்கி வெற்றி பெறக்கூடிய நிலைமையில் சுதந்திரக் கட்சி இல்லை என்ற யதார்த்தத்தை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நிர்வாகத்தின் கீழ் கட்சி சுக்குநூறாக சிதறியுள்ளது. இந்த கட்சியைக் கட்டியெழுப்புவதற்கு மேலும் 5 ஆண்டுகளாவது பாடுபட வேண்டும். அவரும், நிமல் சிறிபால டி சில்வாவும் எடுத்த தவறான தீர்மானங்கள் கட்சியின் சீரழிவுக்கு வழிவகுத்தன. எனவே கட்சியை கட்டியெழுப்புவதற்கு பதிலாக தேர்தலில் போட்டியிட்டு ஒன்று அல்லது இரண்டு இலட்சம் வாக்குகளைப் பெற நான்தயாராக இல்லை.

சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிப்பதற்கு நான் தீர்மானிக்கவில்லை. தனிநபராக என்னால் அவ்வாறான தீர்மானத்தை எடுக்க முடியாது. தேர்தல் குறித்த தீர்மானம் கட்சியின் தீர்மானமாக இருக்க வேண்டும். கட்சி எந்த தீர்மானத்தை எடுத்தாலும் அதற்கு நான் ஆதரவளிப்பேன் என்றார். (ம-7)

### தேர்தல் திகதி அறிவிப்பு

## அபிவிருத்திசார் கூட்டங்களுக்கு இடையூறாக அமையாது - டக்ளஸ்

*(கொழும்பு)*

தேர்தல் திகதி அறிவிப்பு அபிவிருத்திசார் கூட்டங்களை நடத்துவதற்கு இடையூறாக அமையாது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற திட்ட மீளாய்வுக் குழுக் கூட்டத்தின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் வர்த்தமானி வெளியிடப்பட்டது. இன்று (நேற்று) நடக்கும் கூட்டம் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவிடம் கேட்டேன்.

எந்தவொரு வேட்பாளரையும் ஆதரித்தோ அல்லது வேறு ஒரு வேட்பாளருக்கு எதிரான கருத்துக்களையோ வெளியிடக்கூடாது என தெரிவிக்கப்பட்டது.

அதுவரை, எந்தவொரு விடயத்திலும் அவர்கள் தலையிடமாட்டார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இருளில் இருந்து நாட்டை மீட்ட தற்போதைய ஜனாதிபதியின் திட்டங்களுக்கு நாம் ஒத்துழைக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (ம-7)

## பொலிஸாருக்கு இடையூறு 4 சந்தேக நபர்கள் கைது

*(கொழும்பு)*

அலவத்துகொட பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடந்துகொண்ட இருவரை சோதனையிடச் சென்ற போது, பொலிஸாரின் பணிகளுக்கு இடையூறு விளைவித்த 4 சந்தேக நபர்களை கைது செய்ததாக அலவத்துகொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன் போது, 18 வயதுக்கும் 53 வயதுக்கும் இடைப்பட்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அலவத்துகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதான பொலிஸ் பரிசோதகர் உட்பட 4 உத்தியோகத்தர்கள் சுற்றிவளைப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தபோது, அலவத்துகொட பிரதேசத்தின் கொனகல பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடந்துகொண்ட இரு சந்தேக நபர்களை சோதனையிடச் சென்றபோது, சந்தேக நபர்கள் அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கியதையடுத்து, நிலைய கட்டளைத் தளபதி உள்ளிட்ட அதிகாரிகள் குழு அந்த இடத்திற்குச் சென்றபோது, அந்த இடத்தில் சுமார் 30 பேர் கூடியிருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, குற்றவியல் பலாத்கார குற்றச்சாட்டில் நால்வர் கைது செய்யப்பட்டதாக அலவத்துகொட பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ம-7)

## பாலர் கல்விக்கழக விளையாட்டு விழா

பாலர் கல்விக்கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் ஞானக்குழந்தை இல்லங்களின் 2024ம் ஆண்டுக்குரிய வருடாந்த விளையாட்டு விழாவானது இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாலர் கல்விக்கழகத்தின் தலைவர் சமாதான நீதவான் எஸ்.பி.காசிநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ஈ:எஸ்.பி நிறுவன உரிமையாளர் கல்விக் காருண்யன் லயன் இ.எஸ்.பி நாகரத்தினம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம-7)


## அபிஷேகக் கந்தனின் கார்த்திகை உற்சவம்

சோழ இளவரசி மாருதபுரவீகவல்லியினால் குண்ம முகம் நீங்கப் பொருட்டு பூஜிக்கப்பட்ட புராதன முருகத்தலமான மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்த காம்யோற்சவந்தனில் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆடிக் கிருத்திகை நன்னாளில் திருக்கார்த்திகை உற்சவம் சிறப்புற இடம் பெறவுள்ளது.

இந்நாளில் அபிஷேக கந்தனுக்கு விஷேட 108 சங்காபிஷேகமும் சண்முக அர்ச்சனைகளும் இடம்பெறவுள்ளதோடு விஷேட கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்பணி அல்பன் இராஜசிங்கம் அ.ம.தி அடிகளாரின் குருத்துவப் பொன்விழா



யாழ்ப்பாணம் குருநகரை தமது பாரம்பரிய வதிவிடமாகக் கொண்ட அருட்தந்தை அல்பன் இராஜசிங்கம் அ.ம.தி அடிகளார் தாம் வரித்துக் கொண்ட குருத்துவத்துக்கான கற்கைநெறிகளை கத்தோலிக்க திருச்சபையின் முறைமைகளின் படி பூர்த்தியாக்கியதன் பிரகாரம் 24. 07.1974 அன்று தமது பாரம்பரிய பங்கு ஆலயமான குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் திருமலை மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு எல்.ஆர் அன்ரனி ஆண்டகையால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

இவர் தமது பணி வாழ்வின் ஆரம்பத்தில் பண்டத்தரிப்பு பங்கிலும் இளவாலை புனித கென்றி அரசர் கல்லூரியிலும் பணியாற்றினார், தொடர்ந்து மன்னார் மறை மாவட்டத்தின் உயிலங்குளம், முருங்கன், பள்ளிமுனை, சிலாவத்துறை, தலைமன்னார், பேசாலை தாழ்வுபாடு பங்குகளிலும் பணியாற்றி சிறப்பாக மடுமாதா குரு மடத்தின் ஆன்மீகக் குருவாகவும் தொடர்ந்து கல்விப் பணிகளிலும் மன்னார் மறை மாவட்டத்தின் முதியோர் நலன்புரி அமைப்புகளின் இயக்குநர் பணிக்ளிலும் நீண்ட காலம் செயலாற்றினார். சிறிது காலம் திருமலை பாலையூற்று பங்கிலும் அமலமரி தியாகிகள் சபையின் நிர்வாக கடமைகளிலும் சிறப்புடன் பணியாற்றினார். மனிதநேய பணிகளின் மையமாகிய வாழ்வோதயம் அமைப்பிலும் நிறுவனராகவும் இயக்குநராகவும் மிக நீண்ட காலம் மன்னார் மறை மாவட்டத்தில் பணி புரிந்தார். இங்கு இவர் பணியாற்றிய காலம் மக்கள் யுத்த நெருக்கடியின் மத்தியில் வாழ்ந்த காலமாகையால் இவர் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலேயே தனது பணிகளை செய்ய வேண்டி இருந்தது. மக்களின் அன்றாட தேவைகள் மலை போல் அதிகரித்தமையால் இவரது பணிகள் திட்டமிட்டவாறு செயற்படுத்த வேண்டி இருந்தது. இக் காலத்தில் கத்தோலிக்க திருச்சபையின் "செடெக்" தொண்டர் நிறுவனம் இப் பணிகளுக்கு பக்கபலமாக செயற்பட்டது.

மன்னார் மறை மாவட்டத்தின் நிவாரண பணிகளின் அதிகரிப்புக் காரணமாக இப் பணிகளை திட்டமிட்டு செயற் படுத்த ஒரு செயலகத்தின் தேவை அருட்தந்தையால் இனம் காணப்பட்டது. தொடர்ந்து வாழ்வோதயம் அமைப்புக்கான ஒரு காணியும் பணிகளைத் திட்டமிட்டு செயற்படுத்த ஒரு கட்டடமும் மன்னார் நகரின் மத்தியில் நிர்மாணிக்கப்பட்டது. இன்னும் இக் கட்டடத்திலேயே வாழ்வோதயம் செயற்படுகின்றது. அருட்தந்தையின் குருத்துவப் பணிகளை எல்லாவற்றிக்கும் மகுடம் சூட்டுவது போல் அமைவது இங்கு இவர் ஆற்றிய மனிதநேயப் பணிகளே ஆகும்.

சிறப்பாக அல்பன் சுவாமி மன்னார் மறை மாவட்டத்தின் அனைத்து மக்களுக்கும் நன்கு அறிமுகமானவராகவே வாழ்ந்திருக்கிறார் எனின் மிகையாகாது. சிறப்பாக கத்தோலிக்க மக்களுடன் மட்டுமல்லாமல் அனைத்து சமய மக்களுடனும் சகோதர உணர்வுடன் பழகி நல்லதோர் கிறிஸ்தவ பணியாளராக தம்மை இனம் காட்டி வாழ்ந்துள்ளார் என்றும் இவர் மன்னார் மண்ணில் பணியாற்றிய காலம் இவரது குருத்துவ வாழ்வில் மறக்க முடியாத பொற்காலமாகும் எனில் அது மிகையாகாது.

அருட்பணி அல்பன் இராஜசிங்கம் அடிகளார் தனது குருத்துவத்தின் 50 ஆவது அகவை நிறைவை 27.07.2024 இன்று குருநகர் தூய யாகப்பர் ஆலயத்தில் யாழ்.மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, மன்னார்மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு இமானுவல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களின் பிரசன்னத்துடன் குருக்கள், ஏனைய துறவற சபையினர். பொதுமக்கள் என பல்லாயிரக்கணக்கானோருடன் இணைந்து நன்றித் திருப்புலி ஒப்புக்கொடுத்தார்.

**யோகன்**

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3180

### சபரிஷா

நோயாளி

நோயாளி: காதுல பஸ் ஓடுர மாதிரி சத்தம் கேட்குது டாக்டர்.

டாக்டர்: பரிசோதித்து விட்டு அப்படி ஒன்றும் எனக்கு கேட்கவில்லையே!

நோயாளி: இப்போ ஏதாவது சிக்னல்-ல நின்று இருக்குமோ

### சாந்தி

சீடன்: சுவாமி எனக்கு ஒரு சந்தேகம், உங்களுக்கு எப்டி இந்த பொறுமை அமைதி, நிதானம் வந்தது?

குரு: எல்லாம் 20 வருட தவத்தின் பயன் மகனே

சீடன்: எங்கே? தவம் செய்தீர்கள் சுவாமி இமயமலையிலா?

குரு: இல்லே மகனே 20 வருடம் புடவை கடையில் சேல்ஸ் வேலை பார்த்ததின் பயன் மகனே

### அனுஷன்

எறும்பு ஊர கல்லும் தேயும்... பழமொழி



போனு நோண்ட கண்ணும் டிரை ஆகும்...புதுமொழி

### சிந்துஷா

இன்றைய உலகில்...
கேட்டதும் கொடுப்பவன் "நல்லவன்"...



கொடுத்ததை கேட்பவன் "கெட்டவன்"

### தனுஷா

Female இல் இருக்கு male இருக்கு...
Woman இல் Man இருக்கு...
She இல் He இருக்கு...
அடடா Mrs இல் Mr உம் இருக்கார்...

நீதி...!

பெண்ணுக்குள்...
ஆண் அடக்கமாகிறான்...
இல்லையேல் ...
அடங்கிப் போகிறான்...

### விதுஷன்

அண்ணே ராஜாவே இல்லாத ஒரு ராணி அது யாருண்ணே...?
தெரியலையேடா...



அது சாம்பிராணி அண்ணே...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இலத்திரனியல்...

இலத்திரனியல் கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற்கு முன் பதிவு செய்து கொள்ள முடியும். (ம-7)

## பாணின்...

குறைக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில், 450 கிராம் நிறையுடைய பாணின் விலை 10 ரூபாயினால் குறைக்கப்படவுள்ளதுடன்,

நாடு முழுவதும் குறித்த விலைக் குறைப்பு அமுல்படுத்தப்படும் எனத் தெரிவித்தார். (ம-7)

## சுயேட்சையாக...

தப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்துள்ள நிலையில் இந்தக் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் 15ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ம-7)

## 12 ஆயிரம்...

பித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## ஜனாதிபதி...

ஜனாதிபதித் தேர்தலுக்கு மிகப்பெரிய வேட்பாளர் பட்டியல் தயாரிப்பதற்கான ஏதுநிலை உருவாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நீதி அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, மௌபிம ஜனதா கட்சியின் தலைவரும் தொழிலதிபருமான திலித் ஜயவீர ஆகியோர் களமிறங்குவது உறுதியாகியுள்ளது.

மேலும், தொழிலதிபர் தம்மிக்க பெரேரா, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜானக ரத்நாயக்க, முன்னாள் அமைச்சர் ரொஷான் ரணசிங்கயன மற்றும் மிஹிந்தலை ரஜமஹா விகாரையின் விஹாராதிபதி தம்மரதன தேரர் ஆகியோரும் களமிறங்குவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளன.

இதேவேளை வடக்குக் கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தி தமிழ் மக்கள் சார்பாக பொது வேட்பாளர் ஒருவர் போட்டியிடவுள்ளார்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர்.ஜயவர்தனவின் பேரனும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. (ம-7)

## பொது வேட்...

கருத்தியலை ஆதரிக்கவில்லை என இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் ஒருவரை நிறுத்தப் போவதில்லை என இலங்கை தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

எனினும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களுடன் எதிர்காலத்தில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (ம-7)

## செப்ரெம்பர் 21...

வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு அமைவாக ஓகஸ்ட் 15ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

இராஜகிரிய - சரண மாவத்தையிலுள்ள தேசிய தேர்தல்கள் அலுவலகம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இடமாக அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் பிரகாரம் ஓகஸ்ட் 14 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை கட்டுப்பணம் செலுத்த முடியும்.

சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமையை தவிர அலுவலக நாட்களில் காலை 8.30 முதல் மாலை 4.15 வரையான காலப்பகுதியில் கட்டுப்பணம் செலுத்த முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இராஜகிரியவிலுள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் கட்டுப்பணத்தை செலுத்த முடியும்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி சார்பாக ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுவை தாக்கல் செய்யும் வேட்பாளர் 50 ஆயிரம் ரூபாய் கட்டுப்பணம் செலுத்த வேண்டும்.

வேறு அரசியல் கட்சிகள் அல்லது வாக்காளர் அல்லது வேட்புமனு தாக்கல் செய்த வேட்பாளரினால் 75 ஆயிரம் ரூபாய் கட்டுப்பணம் செலுத்தப்பட வேண்டும் எனத் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## கும்பல்...

ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சியில் இருந்து காதலியைப் பார்ப்பதற்காக யாழ்ப்பாணம் உரும்பிராய்ப் பகுதிக்கு இளைஞர் ஒருவர் வந்துள்ளார்.

இதன் போது அங்கு கூடிய இனந்தெரியாத நபர்கள் இளைஞனை முச்சக்கரவண்டியில் ஏற்றிச் சென்று தலைமுடியை வெட்டி வாளால் உடலில் வெட்டி சித்திரவதை செய்துள்ளனர்.

இதன்பின்னர் குறித்த இளைஞனை உடுவில் பகுதியிலுள்ள வீதியொன்றில் போட்டுவிட்டு குறித்த கும்பல் தப்பிச் சென்றுள்ளது.

இதனால் அப்பகுதியில் பரபரப்பான சூழல் ஏற்பட்டுள்ளது.

பூநகரி கிராஞ்சியைச் சேர்ந்த பிரதீபன் விஜனுஜன் என்ற இளைஞரே படுகாயமடைந்ததுடன் பொலிஸாருக்கு நடந்த சம்பவத்தைத் தெரிவித்துள்ளார்.

இளைஞன் நோயாளர் காவு வண்டி மூலம் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம்தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33)

## நாகர்கோவிலில் சடலம் மீட்பு

(கரணவாய்)

நாகர்கோவில் நாச்சிமார் கோவிலடி இராணுவ முகாமுக்குப் பின்புறம் இருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்று வெள்ளிக்கிழமை இரவு மீட்கப்பட்டது.

மன்னாரைச் சேர்ந்த தங்கராஜா பெனாண்டு (வயது-78) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். நேற்று வெள்ளிக்கிழமை (26) இரவு அப்பகுதியில் சடலம் காணப்படுவதாகப் பிரதேசவாசிகளினால் இராணுவ முகாமுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா இரவு சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7,60)


மஹஜன சம்பத — திகதி 2024.07.26 — சீட்டிழுப்பு இலக்கம் 5546 — G 5 8 3 9 4 9
அத சம்பத — G 3 9 4 9 — சீட்டிழுப்பு இலக்கம் 121
National Lotteries Board

தன நிதானய — திகதி - 2024.07.26 — சீட்டிழுப்பு இலக்கம் - 1576 — W 50 71 75 78 W — Double Chance 33622

மெகா பவர் — திகதி 26/07/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1894 — N 17 02 05 11 50 — 14420

லக்கி 7 VIP — திகதி 2024.07.26 — சீட்டிழுப்பு இலக்கம் 372 — Y 2 2 1 9 0 7 Y

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3788 — சீட்டிழுப்பு திகதி 26.07.2024 — C 30 39 51 64 — C 15589

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.07.26 — சீட்டிழுப்பு இலக்கம் 0855 — துலாம் 13 21 49 56 துலாம் — 68290 — 05

உத்தியோகபூர்வ முடிவுகள் — 26.07.2024 — வெற்றி வாரம் 254 — L 4 5 0 7 7 8 — 29279 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,371,724.00 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2520 — வர்ணம் இளஞ்சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 26.07.2024 — தினம் வெள்ளி — 18 33 47 73 T — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 100,007,944.00 — DLB

சனிதா — திகதி 2024.07.26 — வெற்றி வாரம் 4681 — வர்ணம் செம்மஞ்சள் — 29 41 67 73 C — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,405,919.20 — 17007 — DLB

சசிரி — வெற்றி வாரம் 507 — 2024.07.26 — பச்சை — 01 04 05 — 07 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,761,800/- — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4232 — வர்ணம் கரும் நீலம் — சீட்டிழுப்பு திகதி 2024.07.26 — தினம் வெள்ளிக்கிழமை — 03 12 38 49 — மிதுனம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,656,496.00 — 481245 — DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — Q 15 06 38 39 75 — 1696 — இள கபில — 26.07.2024 — வெள்ளி — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 535,361,568.60 — DLB

அட கோடிபதி ADA KOTIPATHI — வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம் : 2346 — சீட்டிழுப்பு திகதி : 2024.07.26 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,634,494.40 — 05 29 51 65 W — 804582 — DLB


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

**1%**

- Visit visa
- Student visa
- Fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்

தொடர்பு : **075 033 6759**

(187)

## காணி விற்பனைக்கு

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் வீட்டுடன் 3.5 பரப்பு உறுதிக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: **076 236 2111**

(1549)

## அனுபவம் வாய்ந்த பராமரிப்பு உதவியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் ஞாபக மறதியுள்ள (Dementia) மூதாட்டி ஒருவரை உடன் இருந்து (24x7) பராமரிப்பதற்கு (Also has to do the daily to day care with her), அனுபவம் உள்ள பெண் உதவியாளர் தேவை.

தங்குமிடம், போதியளவு சம்பளம் தரப்படும். அனுபவம் உள்ள சேவை மனப்பாங்கு கொண்டவர்கள் விரும்பத்தக்கது.

உதவியாளரின் விபரங்கள் உறுதிப்படுத்துவதற்கு தொழில் சார்ந்த இருவரது சிபாரிசு (Reference) அவசியம் ஆகும். ஆர்வம் உள்ளவர்கள் கீழே உள்ள தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.

Tel-**076 792 9638**

(C-861)

## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு: **074 17 37 684**

(182)

## பற்சிகிச்சை

நிரந்தர பலகட்டுதல் (implant), "கிளிப்" போடுதல் மற்றும் அனைத்து நவீன சிகிச்சைகளும்

**கம்சியா பற் சிகிச்சைப் பிரிவில்**

(யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக, Singer Company அருகில்) நடைபெறுகிறது.

578/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**077 375 4490**
**077 220 2769**

(C-860)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## Care Giver - பராமரிப்பாளர்

**கனடா, அமெரிக்கா, ஜேர்மனி**
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

**CIMS College**
49A, Chapel Street, Jaffna.

(C-0862)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0862)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 248/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 169/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 279/= | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 397/= | |
| 1 Kg சம்பா | - 280/= | |
| 1 Kg றவை | - 286/= | |
| 1 L மரக்கறி எண்ணெய் | - 680/= | |
| 400g நெஸ்டமோல்ட் | - 740/= | ~~780/=~~ |
| 750g சுபோஷ சத்துமா | - 560/= | ~~590/=~~ |
| 500 ml Vim Liquid | - 310/= | ~~375/=~~ |
| 01 சந்தூர் சவர்க்காரம் | - 145/= | ~~175/=~~ |
| 01 லக்ஸ் றோஸ் சவர்க்காரம் | - 150/= | ~~165/=~~ |
| 01 Fortune சோயா | - 100/= | ~~150/=~~ |
| 400 g சஸ்ரயன் | - 3425/= | ~~3900/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 51/= | ~~80/=~~ |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 310/= | ~~380/=~~ |

Max 02
400g Anchor
1025/=
~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(195)

Happy Supermarket
0777 8080 30

## பெண் வேலையாள் தேவை

கரணவாய் வடக்கில், பெண் சட்டத்தரணியிடம் எழுதுவினைஞராக (Clerk) பணியாற்ற ஆங்கில, தமிழ் Typing தெரிந்த 35 வயதுக்குட்பட்ட ஒருவர் (பெண்) தேவை. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: **077 358 0935**

(C-854)

## யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்

நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு

ஆடைகளின் சாம்ராஜ்யம்

# இந்தியன் செலக்ஷனின்

ஆடி மாத ஆடைத் தள்ளுபடி



- திருமணப் பட்டுச்சாறிகள்
- கொட்டன் சாறிகள் சல்வார்கள்
- சல்வார் துணிகள்
- புத்தம் புது டொப் வகைகள்
- மற்றும் சிறுவர் சிறுமிகளுக்கான ஆடைத் தெரிவுகள்...

இடம் : யாழ்.வீரசிங்கம் மண்டபம்

காலம் : 12.07.2024 - 06.08.2024 வரை

(1562)

ஞாயிற்றுக்கிழமைகளிலும் தி...

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
12.08.1939

மறைவு
08.08.2023

அமரர்

### திருமதி இராஜதுரை இராஜேஸ்வரி

திதி : அபரபக்க ஷப்தமி

எங்கள் குடும்ப குலவிளக்கே அம்மா!
எங்கள் நெஞ்சறைக் கூட்டில் அழியாத
ஓவியம் நீங்கள்அம்மா! உங்களை
நினைத்து நெஞ்சம் துடிப்பதென்ன
ஒருமுறை உன் அன்பு முகம் காண
ஓடோடி வரமாட்டாயோ அம்மா!

(194)

இராஜகிரி,
...கிழக்கு,
...ட்டி.

நீங்கா நினைவுகளுடன்...
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.